# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 தை 24 செவ்வாய்க்கிழமை (06-02-2001) UTHAYAN - A Lively National Tamil Daily இதழ்:74


## இந்திய கூட்டணி அரசில் இருந்து பா.ம.கட்சி திடீரென விலகியது!

### தமிழகத்தில் அ.தி.மு.கவுடன் தேர்தல் கூட்டு?

புதுடில்லி,பெப்.6

இந்தியாவில் ஆளும் பாரதீய ஜனதாக் கட்சி தலைமையிலான கூட்டணி அரசிலிருந்து தமிழகக் கட்சியான பாட்டாளி மக்கள் கட்சி விலகிவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் மத்திய அமைச்சரவையில் இணையமைச்சர்களாக இருந்த எம்.டி.சண்முகம், வி.பொன்னுசாமி ஆகிய இருவரும் பதவி விலகிவிட்டனர்.

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் பா.ராமதாஸ் நேற்றுக் காலை பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயை சந்தித்துப் பேசிய பின்னர் இந்த அறிவிப்புகள் வெளியாகியிருக்கின்றன.

கூட்டணி அரசில் இருந்து தமது கட்சி விலகிவிட்டதாக பாட்டாளி மக்கள் கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்திருக்கிறார். ஆனால் புதுடில்லியில் அரசாங்க வட்டாரங்கள் இதனை ஊர்ஜிதம் செய்யவில்லை.

பாட்டாளி மக்கள் கட்சியின் அமைச்சர்கள் இருவரினதும் பதவி விலகலை பிரதமர் வாஜ்பாய் ஏற்றுக்கொள்ளவில்லை என்று டில்லி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பாட்டாளி மக்கள் கட்சியின் இந்தத் திடீர் நடவடிக்கைக்கான காரணங்கள் எதனையும் அக்கட்சி உத்தியோகபூர்வமாக வெளியிடவில்லை என்று நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது.

பா.ம.கட்சியின் இந்தத் திடீர் முடிவு தமிழக அரசியல் களத்தில் பெரும் திருப்பங்களை ஏற்படுத்தும் என்று அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.ஆயர் இன்று வன்னி செல்கிறார்

கொழும்பு,பெப்.6

கொழும்பு சென்றுள்ள யாழ். ஆயர் அதி.வண தோமஸ் சௌந்தரநாயகம் வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு இன்று விஜயம் செய்யவுள்ளார்.

அங்கு ஐந்து தினங்கள் தங்கியிருக்கும் ஆயர் மதப்பணிகளில் ஈடுபடுவதுடன் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாட உள்ளார்.

தற்சமயம் உருவாகியுள்ள சமாதான சூழ்நிலையில் பேச்சுக்களை ஆரம்பிக்கக் கூடிய வாய்ப்புக்கள் குறித்து அவர் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கொழும்பில் அவர் தங்கியிருந்த சமயம் அமைச்சர்களையும், வெளிநாட்டுத் தூதர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதேவேளை -

சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டிய அவசியம் குறித்து யாழ்.ஆயர் ஜனாதிபதிக்கு நேற்று முன்தினம் கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளார். (ஐ-3)

## தமிழர்களின் அபிலாஷைகள் நிறைவேற

# நோர்வேயின் முயற்சி தொடர வேண்டும்!

## களியாட்ட விழாக்களின்போது மின் அலங்காரத்துக்குத் தடை!

கொழும்பு,பெப்.6

நீரேந்து பகுதிகளில் நீர் வற்றி வருவதை அடுத்து தெற்கில் மின்வெட்டு அமுலுக்கு வரவுள்ளது.

இதன் முதல் நடவடிக்கையாக மின் பாவனையைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் அமுலுக்கு வந்துள்ளன.

இதன்படி இலங்கை மின்சார சபை மற்றும் லங்கா மின்சாரக் கம்பனி பிறைவேட் லிமிட்டெட் ஆகியவற்றால் விநியோகிக்கப்படும் மின்சாரத்தை களியாட்டங்கள் மற்றும் விழாக்கள் நடைபெறும் மைதானங்களில் அல்லது கட்டடங்களில் ஒளியூட்டுவதற்குப் பயன்படுத்த முடியாது.

வர்த்தக நிலையங்கள், அவற்றின் விளம்பரப் பலகைகள் ஆகியவற்றை மின் ஒளியால் அலங்காரம் செய்வதும் தடை செய்யப்பட்டிருக்கிறது. குளிரூட்டும் சாதனங்களின் பயன்பாட்டுக்கும் இந்தக் கட்டுப்பாடு

(12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி வாழ் மக்கள் சொல்ஹெய்முக்கு மகஜர்

வவுனியா,பெப்ரவரி6

**“சுயநிர்ணய உரிமையுடன் கூடிய கௌரவமான சுதந்திர வாழ்வு என்னும் தமிழ் மக்களின் அபிலாஷை நிறைவேற தங்களது சமாதானப் பணி இடைவிடாது முன்னெடுக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம்”**

**நோர்வேயின் விசேட தூதர் எரிக் சொல்ஹெய்முக்கு வன்னி வாழ் மக்கள் நேற்று அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கின்றது.**

வன்னி மக்களின் சார்பில் புதுக்குடியிருப்பு வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் இந்த மகஜரை எரிக்சொல்ஹெய்முக்கு அனுப்பி வைத்துள்ளது.

நீடித்த சாத்தியப்பாடுடனான சமாதானத்துக்கான அழைப்பாக நல்லெண்ண சமிக்ஞைகளை தமிழீழ விடுதலைப் புலிகள் காலத்துக்குக் காலம் வெளியிட்டு வந்துள்ளனர். ஆனால் அவை உதாசீனப்படுத்தப்பட்டன என்பதே வேதனைக்குரிய வரலாறாகும். சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்ற காலங்களிலும் சிங்களப் பௌத்த பேரினவாதம் வஞ்சகம் மிகுந்த நோக்குடன் சமாதானத்துக்கான பாதையில் இடர்களை விளைவித்து வந்தது. மேற்கண்ட பின்னணியில் - மாற்றம் நிகழாத சூழ்நிலையில் - விளைவிக்கப்படுகின்ற இடர்களுக்கு மத்தியிலும் சமாதான இலக்கை எப்படியாவது எட்டுவதென "தாங்கள் விடாப்பிடியாக

(12ஆம் பக்கம் பார்க்க)

## நாயாறு கடலில் மீனவர் மரணம்

வவுனியா,பெப்.6

முல்லைத்தீவு மாவட்டம் நாயாறு கடற்பகுதியில் நேற்று மாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றில் அப்பகுதியில் மீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவர் ஒருவர் உயிரிழந்தார். மூன்று மீனவர்கள் காயம் எதுவுமின்றி உயிர் தப்பினர்.

உயிர் தப்பியோர் 10 மைல் தூரம் கடலில் நீந்திக் கரைசேர்ந்தனர் என்று வவுனியாவுக்குக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

பட்டுவாகலைச் சேர்ந்த யோகராஜா பாரத்தீபன் (வயது17) என்பவரே உயிரிழந்தவராவார். (ஐ-7-164)

## சிங்கள இனவாத அமைப்புகளை பிரிட்டன் தடைசெய்ய வேண்டும்!

### தமிழர் கூட்டமைப்பு கோருகின்றது

லண்டன்,பெப்.6

பிரிட்டனில் செயற்படும் சிங்கள இனவாத அமைப்புகளை உடனடியாகத் தடை செய்யுமாறு அங்குள்ள தமிழ் அமைப்புக்கள் ஒன்றிணைந்து பிரிட்டிஷ் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

'இலங்கையில் சமரசத் தீர்வுக்கான தமிழர்கள் அமைப்பு' என்ற கூட்டமைப்பே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

இலங்கையில் தமிழ்மக்கள் மீது மேற்கொள்ளப்படும் வன்முறைச் சம்பவங்களுக்கு இத்தகைய சிங்கள இனவாத அமைப்புகளே காரணம் என்றும் -

இந்த அமைப்புகளின் உதவியுடனேயே குமார் பொன்னம்பலம் போன்ற தமிழ்த் தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டனர் என்றும்-

சுட்டிக்காட்டியுள்ள தமிழ் அமைப்புக்கள் விடுதலைப்புலிகள் இயக்கத்தை பிரிட்டன் தடை செய்யக் கூடாது என்றும் வலியுறுத்தியுள்ளன.

(ஐ-7)

## ஆனையிறவு அருகே நேற்று மாலை

# கடற்புலிகளின் தளம் மீது விமானங்கள் குண்டு வீச்சு!

கொழும்பு,பெப்.6

ஆனையிறவுக்குச் சமீபமாக - நல்லதண்ணிமுனைப் பகுதியில் - அமைந்திருந்த கடற்புலிகளின் தளம் ஒன்றை விமானப்படையினர் நேற்று மாலை தாக்கி அழித்து விட்டதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலில் மிக்27 ரக விமானங்களும், கிபிர் விமானங்களும் ஈடுபடுத்தப்பட்டன என்றும் -

தாக்குதல் இடம்பெற்றதும் புலிகளின் தளம் அமைந்திருந்த பகுதியிலிருந்து கடும் புகைமூட்டம் தென்பட்டதாகவும் -

விசேட ஊடகத் தகவல் நிலையத்தின் அறிக்கை தெரிவித்தது.

இதேவேளை -

முல்லைத்தீவுக் கடலில் நேற்றுக் காலை கடற்படையினரின் நடமாட்டங்களைக் கண்காணிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த விடுதலைப் புலிகளின் படகு ஒன்றைக் கடற்படையினர் தாக்கியழித்து விட்டதாகவும் ஊடகத் தகவல் நிலையம் அறிவித்தது. (ஐ-7)

## பாதயாத்திரை சென்ற இடங்களில் ஐ.தே.கவினர் மீது தாக்குதல்கள்!

### கொடிகள் அறுப்பு! தொண்டர்கள் மீது சூடு!!

மாவனல்லையிலிருந்து ப.பன்னீர்ச்செல்வம்

கொழும்பு,பெப்.6

அரசின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி கண்டியிலிருந்து ஆரம்பித்துள்ள 'மக்கள் சக்தித் தொழிற்பாடு' எனும் பாதயாத்திரை நேற்று இரண்டாவது நாளாகத் தொடர்ந்து நடைபெற்ற வேளை அக்கட்சியின் ஆதரவாளர்கள் மீது பரவலாகத் தாக்குதல்கள் நடததப்பட்டுள்ளன.

சில இடங்களில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும் இடம்பெற்றிருக்கின்றன.

கேகாலை, ரம்புக்கணை, மொலகொட பிரதேசங்களில் பாதயாத்திரை செல்ல வசதியாக வீதி ஒழுங்கு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஐ.தே.க. ஆதரவாளர்கள் தாக்கப்பட்டனர். மொலகொட ஜெயபால வித்தியாலயத்துக்கு அருகே லொறியில் வந்த ஆதரவாளர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இதனால் லொறிச் சாரதி காயமடைந்தார்.

யாத்திரை செல்லும் வழிகளில் அலங்காரம் செய்யும் பணியில் ஈடுபட்டோரும் தாக்கப்பட்டனர். வீதிகளில் கட்டப்பட்டிருந்த கொடிகள், பதாகைகள் என்பனவும் அறுத்தெறியப்பட்டன.

(12ஆம் பக்கம் பார்க்க)

## விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு,பெப்.6

கண்டியில் இருந்து கொழும்பு நோக்கி ஐ.தே.கட்சியினர் ஆரம்பித்துள்ள பாதயாத்திரையில் பங்குபற்றும் சகலருக்கும் ஆகக் கூடுதலான பாதுகாப்பை வழங்குமாறு பொலீஸாருக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இந்தப் பாதயாத்திரையில் ஈடுபடுபவர்கள் மீது நேற்று நடத்தப்பட்டதாகக் கூறப்படும் தாக்குதல் குறித்து பூரண விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கும்படியும் ஜனாதிபதி பொலீஸ்மா அதிபரைக் கேட்டுள்ளார்.

பாதயாத்திரையைக் குழப்பும் விதமான எந்த நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டாம் என்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பிரதேச அமைப்பாளர்களையும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் ஜனாதிபதி கோரியுள்ளார். (ஐ-3-7)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

தைப்பூச நன்னாளில்

நாளை ஞாபகமிருக்கின்றதா....?

ECONOMICS

பிரத்தியேக வகுப்புகள்

ஆரம்பம் நாளை (07.02.2001)

A/L 2003/02

ஆசிரியர்:- திரு. தயாபரன் B.A.(Econ.) Spl.

இடங்கள் : ★ நியூ பிறைற் கல்வி நிலையம் ★ யாழ். கல்வி நிலையம்
மார்ட்டின் வீதி, யாழ்ப்பாணம். ஆறுகால்மடம்.

★ நியூ லக்கி கல்வி நிலையம் ★ லக்கி கல்வி நிலையம்
தாவடி, கொக்குவில். தொட்டிலடி.

மு.குறிப்பு:- நேர அட்டவணைகள் கல்வி நிலைய அலுவலகங்களில்

(83802)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| பூவுலகில் | வின்னுலகில் |
|---|---|
| 13 | 07 |
| - | - |
| 01 | 01 |
| - | - |
| 1941 | 2001 |

### திருமதி அருந்தவம் இராஜதுரை

*அன்புத் தெய்வமே! பண்பின் உறைவிடமே!*
*பாசத்தின் பிறப்பிடமே! பொறுமையின் பொக்கிஷமே!*

*ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்ட தெய்வமே!*
*நினைக்குமுன் நிறைந்து விட்டீரே!*

*கதறி அழுகின்றோம் காலனின் பிடியை நினைத்து*
*மீண்டும் ஒரு முறை உங்கள் திருமுகம் காட்ட*
*உதிப்பீரோ தரணியில்...*

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவால் வாடும்
**பிள்ளைகள், சகோதரன்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

35/2A, குமாரசாமி வீதி,
கந்தர்மடம்.
(83726)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### திருமதி குலசிங்கம் இன்பராணி

பிறப்பு 1951.01.24

இறப்பு 2001.01.07

அன்பின் உருவமாய்
ஆசையுடன் எமை வளர்த்து
இன்ப வாழ்வு தந்த
அம்மாவே! விண்ணுலகம் போனாயோ?

அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (6.2.2001) செவ்வாய்க்கிழமை நடைபெறும் இந்நிகழ்வில் தாங்கள் வருகை தந்து, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*நாகலிங்கம் முதலியார் வீதி,*
*பருத்தித்துறை.*
(83797)

கணவன், பிள்ளைகள்,
தந்தை, உற்றார்,
உறவினர்.

## விளையாட்டு நிகழ்வுகள்

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளில் உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று முதல் மூன்று தினங்களுக்கு பிற்பகல் 3.30 மணி முதல் நெடுந்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளன.

வலைபந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 11ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணி முதல் மேற்படி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

நெடுந்தீவு மற்றும் ஊர்காவற்றுறைப் பகுதிகளுக்கான உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகத்தின் வழிகாட்டலில் விளையாட்டு உத்தியோகத்தர் க.விஜிதரன், போட்டிகளுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார். (ஐ-7)

## மாவிட்டபுரத்துக்கு பக்தர்கள் செல்ல வசதி

மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலில் நாளை நடைபெறும் தைப்பூசத் திருவிழாவில் பக்தர்கள் சிரமமின்றிக் கலந்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஈ.பி. டி.பி. அறிவித்துள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இராணுவ உயர் அதிகாரிகளுடன் நடத்திய கலந்துரையாடலையடுத்து இதற்கான உறுதி வழங்கப்பட்டுள்ளதாக அந்த அமைப்பு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## ஊர்காவற்றுறை இளைஞர் கைது

ஊர்காவற்றுறைப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக அவரின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை சிவன் கோயிலடியைச் சேர்ந்த மருதப்பிள்ளை றேமன் (வயது 20) என்பவரே கடந்த 3 ஆம் திகதி கல்வியங்காட்டுச் சந்தியில் வைத்துப் படையினரால் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இவரது கைது தொடர்பாக 'ரிசீற்' வழங்கப்பட்டுள்ளது. (ஐ-10)

அன்றும், இன்றும்,
இனி என்றென்றும்.......
BEACON
வெலிங்டன் சந்தியருகில்
அளவையியல்
S.S.மனோகரன்
A/L 2002
பிரிவு II
ஆரம்பம்: நாளை காலை 8.00
குறிப்பு: ஆரம்பத்தில் இருந்து அனைத்து அலகும் கற்பிக்கப்படும்.
(83808)

ராஜா
யாழ்ப்பாணம்
விஜயகாந்த், தேவயானி,
ரகுவரன், அம்பிகா
மற்றும் பலர் நடிப்பில்
வல்லரசு
காட்சிகள்: 10.30, 2.00 (பு.நே.)
(C/15058)

லஷ்சுமி இணுவில்
4ஆவது வெற்றி வாரமாக
விஜயகாந்த்,மீனா நடிக்க
வானத்தைப் போல
(நீல்ஸ்)
இனிய பாடல்கள் நிறைந்தது.
காட்சிகள் : 11.00, 2.30(பு.நே.)
(83813)

நாகம்ஸ்
சுன்னாகம்
அர்ஜீன், ரம்பா, ரகுவரன், கபாலி
சுதந்திரம்
(நீல்ஸ்)
காட்சிகள்:11.00, 2.30 (புதிய நேரம்)
(C/15135)

## மற்றொரு தொகுதி பாடநூல்கள்

யாழ்ப்பாணம்,பெப்.6

யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கான இரண்டாவது தொகுதி இலவச பாடநூல்கள் கப்பலில் எடுத்துவரப்பட்டுள்ளன.

அவை இன்று செவ்வாய்க் கிழமை லொறிகளில் ஏற்றி வரப்பட்டு கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் களஞ்சியப்படுத்தப் படவுள்ளதாக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ச.நா.தணிகாசலம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இந்தப் பாடநூல்கள் அடுத்த வாரம் சகல கல்வி வலயங்களுக்கும் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-10)

# மரண அறிவித்தல்கள்

## வேலாயுதர் ஆறுமுகம்

**(பிரபல வர்த்தகர், சாவகச்சேரி ஆறுமுகம் தேநீர்ச்சாலை, கூல்பார்.)**

புங்குடுதீவு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், முதலாம்வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதர் ஆறுமுகம் நேற்று (05-02-2001) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அன்னம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தெய்வேந்திரம் (கூட்டுறவுப் பரிசோதகர்), சாரதாதேவி, சரஸ்வதி, திலகவதி, சிவலோகநாதன் (லண்டன்), சிவயோகவதி, சோமகலாவல்லி (பிரான்ஸ்), கேதீஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், காலஞ்சென்ற சகுந்தலாதேவி, பரநிருபசிங்கம் (இளைப்பாறிய காசாளர், நீர்ப்பாசனத் திணைக்களம்), சோமசுந்தரம் (முன்னாள் பிரபல வர்த்தகர், திருகோணமலை), திருவாவினன்குடியார் (சுவிஸ்), கமலாம்பிகை(லண்டன்), நித்தியானந்தன(பிரபல வர்த்தகர், யாழ்ப்பாணம்), கனகசுந்தரம்(பிரான்ஸ்), வாசுகி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்றவர்களான பொன்னாச்சி, செல்லாச்சி, சின்னத்தங்கம், இராமலிங்கம், இராமசாமி, செல்லப்பா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம், இராசம்மா, பொன்னம்பலம், நல்லபிள்ளை மற்றும் தம்பிராசா(கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும், சண்முகாநந்தன் யாமினி, யாழினி, கிரிசா, அபிரா, மயூரன், பரமலிங்கம் கலைமகள், வேலழகன் சங்கீதா, பிறேமதாசன் கலைவாணி, கலைபாரதி, ஸ்ரீரங்கன், நாகஜோதி, திருவாதவூரன், ஜீவதாரணி, பிரியதர்சினி, சுகந்தினி, சஞ்சேய், நிவாசினி, ஜனனி, ஜசிகா, நிஷாந்தன், நிரோஷன், கார்த்திகா, கஸ்தூரிகா, கீர்த்திகா, ஆரணி, சிந்துஜன், விதுசன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06-02-2001) செவ்வாய்க்கிழமை பி.ப 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக புங்குடுதீவு மணற்காடு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முதலாம் வட்டாரம்,*
*புங்குடுதீவு.*
(83806)

தகவல்:
கா.நித்தியானந்தன்
(மருமகன்)

## பொன்னையா சிவபாதம்

வதிரியைப் பிறப்பிடமாகவும், புத்தூரை வசிப்பிடமாகவும், வதிரி பொமேஸ் விளையாட்டுக்கழகம், புத்தூர் வளஸ் விளையாட்டுக்கழகங்களின் அதிசிறந்த முன்னாள் உதைபந்தாட்ட வீரருமாகிய பொன்னையா சிவபாதம் அவர்கள் 04-02-2001 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*'பொன்னருவி'*
*வதிரி,*
*கரவெட்டி.*
(C/15170)

தகவல்:
வே.சிவபாதம் (மைத்துனர்)
சி.மகேந்திரன் (மகன்)
சி.அசோகன் (மகன்)

## செல்லையா இராசதுரை

**(உடுவில்)**

உடுவில் கிழக்கு, அம்பலவாணர் வீதி, வத்தனை வளவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர் திரு.செல்லையா இராசதுரை (யா/நடேஸ்வராக் கல்லூரி) அவர்கள் நேற்று (05.02.2001) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் ஓய்வுபெற்ற ஆசிரியை பரிபூரணத்தின் அன்புக் கணவரும் பாக்கியம், சின்னத்தங்கச்சி, ஆகியோரது சகோதரரும் காலஞ்சென்ற பயஸ் இராசதுரையின் மைத்துனரும் ஜீவானந்தன், பத்மினி ஆகியோரது தாய்மாமனும் ஜெனனி, ஜெரோமி, யோனத்தான் சிவதர்சன், சிவாஞ்சலி ஆகியோரது அன்புப் பேரனுமாவர்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2001) செவ்வாய்க் கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பூவோடை மயானத்துக்குத் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வத்தனை வளவு,*
*அம்பலவாணர் வீதி,*
*உடுவில் கிழக்கு,*
*சுன்னாகம்.*
(83818)

தகவல்:
இ.பரிபூரணம்
(மனைவி)

## வைரமுத்து நல்லதம்பி

பன்னாலையைப் பிறப்பிடமாகவும் மயிலணி சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து நல்லதம்பி அவர்கள் நேற்று (05.02.2001) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி தங்கப்பிள்ளையின் அன்புக் கணவரும் சிவபாலசிங்கம்(ஓய்வுபெற்ற ஊழியர், சீமெந்துக் கூட்டுத்தாபனம்), காலஞ்சென்ற குணரத்தினம் மற்றும் கதிர்காமத்தம்பி (சீமெந்துக் கூட்டுத்தாபனம்), அப்புத்துரை, கிருஷ்ணமூர்த்தி(காசாளர், தெல்லிப்பளை பல நோ.கூ.சங்கம்), இராஜலட்சுமி, துரைராஜசிங்கம் (வலிகாமம் கல்விவலய ஆசிரிய ஆலோசகர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தங்கேஸ்வரி, வசந்தகுமாரி, பாலகௌரி, சுலோசனா, வயிரவப்பிள்ளை(ஓய்வுபெற்ற மெக்கானிக் சார்ஜன்ட், சீமெந்துக்கூட்டுத்தாபனம்), வாசுகி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2001) செவ்வாய்க் கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*திரு.ந.துரைராசசிங்கம்,*
*மே/பா ம.சத்தியபாலன்,*
*மயிலணி,*
*சுன்னாகம்.*
(83817)

தகவல்:
ந.துரைராசசிங்கம்
(I.S.A.)
(மகன்)

# யாழ். மாவட்ட வலயங்களிடையே 76 ஆசிரியர்களுக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், பெப். 6

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்களில் 76 பேருக்கு தற்பொழுது கடமையாற்றும் வலயங்களில் இருந்து வேறு கல்வி வலயங்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், தீவகம் மற்றும் வலிகாமம், வடமராட்சி ஆகிய கல்வி வலயங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இடமாற்றம் பெறுபவர்கள் அனைவரும் எதிர்வரும் 15ஆம் திகதியிலிருந்து தற்பொழுது இடமாற்றம் வழங்கப்பட்டுள்ள கல்வி வலயங்களில் தமது கடமையைப் பொறுப்பேற்க வேண்டும் எனவும்—

சம்பந்தப்பட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கடமையாற்றவேண்டிய பாடசாலைகளின் விவரங்களை அவர்களுக்கு வழங்குவர் என்றும்—

மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச. நா. தணிகாசலம்பிள்ளை அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் இருந்து தீவகக்கல்வி வலயத்துக்கு இடமாற்றம் பெறுவோர் விவரம் வருமாறு:-

திருமதி ஆ. கணேசலிங்கம், திருமதி எஸ். முத்துக்குமாரசாமி, திருமதி சு. ஐ. ஜெயக்குமார், திருமதி ஜி. பரந்தாமன், திருமதி எம். விஜயகுமார், எஸ். கருணாகரன், திருமதி ரோ. பாலஸ்கந்தன்.

திருமதி எஸ். நந்தகுமார், எப். ஜே. ஜெயக்குமார், த. முத்துலிங்கம் ஆர். மன்மதராஜா, திருமதி பி. சிவகுமாரன், செல்வி வி. வேலாயுதபிள்ளை, செல்வி எம். மங்களராஜேஸ்வரி, செல்வி யி மனோரஞ்சினி, ஆர். தபநாதன், திருமதி ஆர். குபேந்திரதாஸ்.

திருமதி பெ. ஜீவானந்தம், திருமதி ஏ. விமலன், எஸ். ஜி. ஜோசப் அனுரா, எஸ். பரமேஸ்வரன், திருமதி ஏ. செங்கதிர்ச்செல்வன், ஏ. லூ. புவிராஜசிங்கம், திருமதி பி. பாரதிதாசன், திருமதி மே. யோ. ஜெயராஜா.

லா. ய. அன்ரனிற்றோ, திருமதி பு. ஞானசம்பந்தன், திருமதி ரி. எவ். றூமன், திருமதி நா. சுகிர்தலிங்கம், திருமதி எஸ். கங்காதரன், திருமதி பி. எஸ். ஜயசிந், திருமதி கு. இராஜேந்திரன்.

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் இருந்து தீவகக் கல்வி வலயத்துக்கு இடமாற்றம் பெற்றோர் விவரம் வருமாறு:-

ஜே. ஜெயமோகன், திருமதி பி. யோகதாசன், திருமதி வி. கருணாகரன், செல்வி கே. காசிலிங்கம், திருமதி பி. மகேந்திரன், செல்வி வி. இராசதுரை, ரி. திலீபன், ந. குமணன், செல்வி கே. கந்தையா.

செல்வி கே. குலசுந்தரி, நா. இந்திரநேசன், கே. மனோகர், பி. அருமைநாதன்.

தீவகக் கல்வி வலயப் பாடசாலைகளில் இருந்து வலிகாமம் கல்வி வலயத்துக்கு இடமாற்றம் பெற்றோர் விவரம் வருமாறு:-

திருமதி ம. செல்வநாயகம், ப. சுதானந்தராஜா, திருமதி த. சண்முகரத்தினம், திருமதி ஜெ. கி. அன்ரன், திருமதி பு. சேனாதிராஜா.

திருமதி மோ. கஜமுகவரதன், செல்வி வ. கணேசன், திருமதி கி. ஸ்ரீக்குமார், திருமதி ற. கனகநாயகம், செல்வி க. சுவாசினி, திருமதி சி. சிறிகாந்தா, செ. நடேசகாந்தன்.

தீவகக் கல்வி வலயப் பாடசாலைகளில் இருந்து யாழ்ப்பாண வலயப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றோர் விவரம் வருமாறு:-

திருமதி ஏ. ஜே. ஆர் சஞ்ஜே பெனடிக், திருமதி செ. க. அருள்நேசன், திருமதி றொ. ஜே. ஞானதாசன், திருமதி இ. இலட்சுமிப்பிரபா, க. சிவபாலன்.

திருமதி ம. மகேந்திரன் திருமதி கி. பிரான்சிஸ், செல்வி கு. திலகவதி, திருமதி வா. தவபாலன், த. சிவானந்தன், செல்வி செ. எ. சுபாசினி, திருமதி வா. பரமநாயகம், திருமதி க. கேதீஸ்வரசர்மா, செல்வி து. பத்மபூசணகுமாரி, திருமதி ஸ்ரீ. சிவஞானம், இ. ரவிச்சந்திரன்.

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் இருந்து திருமதி ஜெயமணி டெனிசியஸ், திருமதி மீ. யோகரத்தினம் ஆகியோர் யாழ்ப்பாண வலயப்பாடசாலைகளுக்கும் |

வடமராட்சி வலயத்தில் இருந்து திருமதி ரா. முருகானந்தம் வலிகாமம் வலயத்துக்கும்—இடமாற்றம் பெற்றுள்ளனர். (ஐ-7-10)

# உதயன்

## இரண்டாவது திருப்பம்

பேச்சுக்களை நடத்துவது தொடர்பாக விடுதலைப் புலிகளின் தரப்பிலிருந்து ஓரளவு சாதகமான பதில் கிடைத்துள்ளது. இந்த நல்ல சந்தர்ப்பத்தை உரிய முறையில் பயன்படுத்தி இனப்பிரச்சினைக்குச் சுமுகமான தீர்வு காண முயற்சிப்போம் –

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று முன்தினம் தமது சுதந்திர தின உரையில் தெரிவித்த தகவல் இது.

ஜனாதிபதியின் இந்தத் தகவல் அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் முன்னேற்றம் உண்டாகியிருக்கிறது என்பதனை ஓரளவு காட்டுகிறது; ஒருவகையில் இது ஓர் அரசியல் திருப்பமும் ஆகும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது, போரை நிரந்தரமாக நிறுத்தி அமைதி நிலையைக் கொண்டு வருவது ஆகிய இரண்டும், ஒன்றுடன் மற்றது இணைந்த நிலையில் உள்ளன.

அத்தகைய ஒரு நெருக்கடி மிகுந்த அரசியல் சூழ்நிலையில், கடந்த வருடம் நவம்பர் மாதம் முதலாம் திகதியன்று, நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் வன்னியில் தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரனைச் சந்தித்துப் பேசினார். இனப்பிரச்சினைக்குச் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு அவ்வேளை தலைவர் பிரபாகரன் இணக்கம் தெரிவித்திருந்தார்.

அவரது அந்த இணக்க நிலை இலங்கை அரசியலில் பெரும் திருப்பமாக அமைந்தது. உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் பெரும் வரவேற்பையும் பெற்றது. அதனைத்தொடர்ந்து சாதகமான திருப்பங்கள் உண்டாகும் என்று பல தரப்புகளும் எதிர்பார்த்தன.

கடந்த மூன்று மாதங்களாக இலங்கை மக்களினதும், சர்வதேசப் பார்வையாளர்களினதும் அந்த எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை. தாமதமாகி, நவம்பர் முதலாம் திகதி திருப்பத்துக்கு அடுத்ததாக — இரண்டாவது திருப்பமாக — பெப்ரவரி நான்காம் திகதிய ஜனாதிபதியின் அறிவிப்பு அமைந்துள்ளது.

சமாதானமே அரசாங்கத்தின் தூரதிருஷ்டியான கொள்கையாகும். எனவே இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்வது அவசியம் — என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு வந்தால் மட்டுமே அவர்களுடன் பேச முடியும் என்றும், தனிநாட்டுக் கோரிக்கையை கைவிடுவதாகக் கூறினால் மட்டுமே பேச முடியும் என்றும் கடந்த நவம்பர் மாதத்துக்கு முன்னர் அரசாங்கம் கடைப்பிடித்த நிலைப்பாட்டுடன் ஒப்பிடும் போது —

இப்போதைய நிலைப்பாடு மிகவும் முன்னேற்றகரமானது—திருப்பம் நிறைந்தது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குக் கிடைத்துள்ள நல்ல சந்தர்ப்பம் இது என்று கடந்த மூன்று மாதங்களில் பல தடவைகள் ஏற்கனவே இப்பத்தியில் வலியுறுத்தி வந்தோம். நாம் மட்டுமன்றி, தமிழர் தரப்புகள் எல்லாமே அதனையே வற்புறுத்தின. சர்வதேச மட்டத்திலும் அதே கருத்தே நிலவியது.

ஜனாதிபதியும் அந்தக் கருத்தை —நல்ல தருணத்தை நழுவவிடக் கூடாது என்ற கருத்தை — முன் வைத்திருப்பது நம்பிக்கையின் ஒளிக்கீற்றாகத் தென்படுகிறது. அரசு தனது இந்த நான்காம் திகதிய நிலைப்பாட்டிலிருந்து பிறழாது உழைக்க வேண்டும். அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதே மக்களின் விருப்பம்.

## சித்தன்கேணியில் நாளை கற்பகச்சோலை மண்டபத் திறப்பு விழா

வலி.மேற்கு, பெப். 6

வட்டு. வடக்கு சித்தன் கேணியில் கற்பகச்சோலை பலநோக்கு மண்டபம் நாளை புதன்கிழமை காலை திறந்து வைக்கப்படும்.

வட்டு. வடக்கு கற்பகச் சோலை நன்மை விருத்திச் சங்கத் தலைவர்பொ. கங்காதரன் தலைமையில் நடைபெறும் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக வலிகாமம் மேற்குப் பிரதேச சபைத் தலைவரும், வட்டுக் கோட்டைத் தொகுதி ஈ.பி.டி.பி. அமைப்பாளருமான ந. திரிலோகநாதன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக வலிகாமம் மேற்குப் பிரதேச செயலாளர் நா. வேதநாயகன் பங்குபற்றுவார். ஆசியுரையை செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் வழங்குவார். கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

(க-175-15)

**உதயவாக்கு**

திறமையும் அவசியமும் ஒன்றுக்கொன்று பக்கத்தில் வாழ்கின்றன.

# நாளை

**தை 25**

**புதன்கிழமை**

திதி: சதுர்த்தசி
பிற்பகல் 3. 53 வரை.
நட்சத்திரம்: பூசம்
முன்இரவு 10. 21 வரை.
தைப்பூச நன்னாள்
பூரணை விரதம்
சுபநேரம்: 5.05 — 6.35
ராகுகாலம்: 12.35—2.05
(பகலுக்கும் இரவுக்கும்)
பழைய நேரப்படி

## வணிகபீட மாணவர் பரீட்சைகள்

யாழ்ப்பாணம், பெப். 6

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட முதலாம் வருட மாணவர்களுக்கான அரை இறுதி ஆண்டு பரீட்சைகள் எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பமாகி 27 ஆம் திகதி வரை நடைபெறும்.

இரண்டாம் வருட மாணவர்களுக்கான அரை இறுதி ஆண்டு பரீட்சைகள் எதிர்வரும் 28 ஆம் திகதி ஆரம்பமாகி மார்ச் மாதம் 8 ஆம் திகதி வரை நடைபெறும் என்று முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட பீடாதிபதி தெரிவித்தார். (க-ம-ரி)

## யாழ். முனியப்பர் ஆலயத்தில் அன்னதானம்

யாழ்ப்பாணம், பெப். 6

யாழ்ப்பாணம் சிறைச்சாலை ஊழியர்களின் உபயத்துடன் நாளை தைப்பூசத் தினத்தில் யாழ். முனியப்பர் ஆலயத்தில் அன்னதானம் வழங்கப்படவுள்ளது.

கடந்த 17 வருடத்துக்குப் பின் மீண்டும் சிறைச்சாலை ஊழியர்களினால் முனியப்பர் ஆலயத்தில் அன்னதானம் வழங்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (க-5)

## அச்சுவேலி தபாலகம் அமைக்கக் காணி

கோப்பாய், பெப். 6

அச்சுவேலி பிரதான தபாலகத்திற்கு நிரந்தரக்கட்டடம் நிர்மாணிக்க வலி.கிழக்கு பிரதேச சபை அச்சுவேலியில் உள்ள சபைக்குச் சொந்தமான ஒரு பகுதிக் காணியைக் கொடுக்கத் தீர்மானித்துள்ளது.

அச்சுவேலி பிரதான தபாலகம் தற்போது வசதிகள் குறைந்த நிலையில் தனியார் கட்டடத்திலேயே இயங்கி வருகின்றது. [க-72]

## விளையாட்டு நிகழ்வுகள்

நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களிடையேயான வலைப்பந்தாட்டப் போட்டிகள் நாளை புதன்கிழமை காலை 8மணிக்கு அரியாலை மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

இப்போட்டிகளில் ஆறு கழகங்கள் கலந்து கொள்ளவுள்ளன. (க-86)

★ ★ ★

வலி. வடக்குப் பிரதேச செயலகத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையேயான ஆண், பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகள் நாளை புதன்கிழமை காலை 8. 30 மணி முதல் மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

ஆண்கள் பிரிவில் 12 கழகங்களும் பெண்கள் பிரிவில் 6 கழகங்களும் கலந்து கொள்ளவுள்ளன. (க-86)

★ ★ ★

யாழ். பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் இடம்பெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 3 மணிக்கு — சென். மேரிஸ் வி. க. அணி எதிர் சென். றொக் வி. க. அணி.

★ பிற்பகல் 4 மணிக்கு — கிறீன் பீல்ட் வி. க. அணி எதிர் கிறீன் கிங்ஸ் வி. க. அணி. (ஐ-3)

★ ★ ★

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களிடையேயான எல்லே விளையாட்டு இறுதிப் போட்டிகள் நாளை புதன்கிழமை புத்தூர் வினஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இறுதி ஆட்டங்களில் ஆண் பெண் பிரிவுகளில் புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழகமும் புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக்கழகமும் மோதவிருக்கின்றன. (ஐ-3-86)

★ ★ ★

சங்கானை பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களிடையேயான ஆண், பெண் பிரிவுகளுக்கான எல்லே விளையாட்டுப் போட்டிகள் நாளை புதன் கிழமை காலை 8.30மணிக்கு அராலி தெற்கு மாவத்தை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

ஆண்கள் பிரிவில் 13 கழகங்கள் இப்போட்டிகளில் கலந்து கொள்கின்றன. (ஐ-3-86)

## காணி அன்பளிப்பு

பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு நிரந்தர கட்டடம் அமைப்பதற்கான காணி அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

சங்கத்தின் தலைவர் ஏ. வி. துரையப்பா தமக்குச் சொந்தமான காணியை உறுதி எழுதி நன் கொடையாக வழங்கியுள்ளார். அங்கு நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கான நிதியை சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் இருந்து பெறுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(க—135)

## இளம்பெண் காயம்

குடும்பத்தகராறை அடுத்து கத்திவெட்டுக்கு இலக்காகி காயமடைந்து இளம் பெண் ஒருவர் கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கோப்பாய் தெற்கு வெள்ளருவப் பிள்ளையார் கோயிலடியில் வசிக்கும் எஸ். உதயகீதா (16 வயது) என்பவரே கையில் காயமடைந்த நிலையில் வைத்தியசலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(க.72)

## அரியாலை ஐக்கிய வி. க. ஆண், பெண் பிரிவுகள் இரண்டிலும் 'சம்பியன்

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடந்த கரப்பந்தாட்டப் போட்டியில் ஆண்கள் பெண்களுக்கான இரு போட்டிகளிலும் சம்பியனாக அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டியுள்ளது.

ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை அரியாலை ஐக்கிய வி. க. வும், இரண்டாம் இடத்தை முடமாவடி ஞானவைரவர் வி. க வும் பெற்றுக்கொண்டது.

பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை அரியாலை ஐக்கிய வி. கவும், இரண்டாம் இடத்தை அரியாலை காந்தி வி. கவும் பெற்றுக்கொண்டன. (க-88)

## அன்பளிப்பு

35 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒலி பெருக்கிச் சாதனங்கள் ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பாடசாலையின் பழைய மாணவனும் ஆசிரியருமான அ. பூரணச்சந்திரன் அமரர் மங்கையர்க்கரசி ஞாபகார்த்தமாக இப்பொருள்களை வழங்கியுள்ளார். (உ-86)

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விபரம்

யாழ்ப்பாணம், பெப். 6 இம்மாதம் மூன்றாம் திகதி வரையும் வெளியிடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:-

**சங்கானை**

(156892ஏ), (170715ஏ), (171000ஏ).

**சாவகச்சேரி**

[167604ஏ], [167604பி], [167604சி], [167604டி], [167604ஈ].

**யாழ்ப்பாணம்**

[157090ஏ], [170821ஏ], [170824ஏ].

**கோப்பாய்**

(152282ஏ), (152282பி), (152282சி), (152282டி), (159531ஏ), (159531பி), (159742ஏ), (166940ஏ), (166940பி), (168286ஏ), (168292ஏ), (168292பி), (168366ஏ), (168366பி), (170460ஏ), (170460பி), (170465ஏ), (170465பி), (170823ஏ), (170850ஏ), (171101ஏ), (173277ஏ), (173297ஏ), (173297பி), (173297சி), (173305ஏ), (173305பி), (173331ஏ), (173331பி), (173345ஏ), (173378ஏ), (173378பி), (177035ஏ), (177035பி), (177222ஏ), (177222பி), (177222சி), (177275ஏ), (177275பி), (177276ஏ), (177281ஏ), (177292ஏ), (177292பி), (177299ஏ), (177299பி), (177354ஏ), (177354பி), (177354சி), (177369ஏ), (177373ஏ), (177373பி), (177373சி), (177374ஏ), (177374பி), (177374சி), (177374டி), (177379ஏ), (177379பி), (177415ஏ), (177415பி), (177415சி), (177415டி), (176416ஏ), (177417ஏ), (177417பி), (177417சி), (177417டி), (177419ஏ), (177419பி), (177428ஏ), (177428பி), (177429ஏ), (177431ஏ), (177439ஏ), (177439பி), (177476ஏ), (177476பி), (177490ஏ), (177491ஏ), (177491பி), (177499ஏ), (177499பி), (177500ஏ), (177500பி), (177510ஏ), (177510பி), 1177510சி), (179541ஏ), (179541பி), (179559ஏ), (179559பி), (179560ஏ), (179563ஏ), (179564ஏ), (179565ஏ), (179568ஏ), (179576ஏ). (179583ஏ), (179591ஏ), (179591பி), (179591சி), (179592ஏ), (179592பி), (179609ஏ), (179618ஏ), (179618பி), (180628ஏ), (180637ஏ), (180637பி), (180638ஏ), (180641ஏ), (180641பி), (180642ஏ), (180643ஏ), (180643பி), (180643சி), (180652ஏ), (180652பி), (180695ஏ), (180695பி), (180705ஏ), (180705பி), (180705சி), (180708ஏ), (180712ஏ), (180712பி), (180725ஏ), (180725பி), (180725சி), (180725டி), (180769ஏ), (180832ஏ), (180832பி), (180839ஏ), (180839பி), (180851ஏ), (180851பி), (180877ஏ).

**நல்லூர்**

(144842ஏ), (170679ஏ), (170679பி), (170679சி), (170687ஏ), (170691ஏ), (170814ஏ), (170820ஏ), (170822ஏ), (171293ஏ), (171303ஏ), (171407ஏ), (171408ஏ), (177157ஏ), (177160ஏ), (177160பி), (177162ஏ), (177168ஏ), (177170ஏ), (177179ஏ), (177179பி), (177179சி), (177220ஏ), (179567ஏ), (179567பி), (179567சி), (179578ஏ), (179579ஏ), (179579பி), (179579சி),

**சண்டிலிப்பாய்**

(170811ஏ), (170815ஏ), (171304ஏ).

**தெல்லிப்பழை**

(177289ஏ), (179573ஏ).

**உடுவில்**

(162797ஏ), (162797பி), (162797சி), (167684ஏ), (167684பி), (167684சி), (170813ஏ), (174027ஏ), (174027பி), (174027சி), (174027டி), (174027ஈ), (174121ஏ), (177099ஏ), (177099பி), (179520ஏ), (179527ஏ), (179527பி), (179546ஏ), (179547ஏ, (149547பி), (179548ஏ), (179551ஏ), (179556ஏ), (179570ஏ), (179570பி), (179572ஏ), (179572பி), (179596ஏ), (179596பி), (179605ஏ), (179614ஏ), (179621ஏ), (179622ஏ), (179650ஏ), (179650பி),

[ம—10]


## கண்ணீர் அஞ்சலி

### தயானந்தன் வாகீசன்

(உரிமையாளர், லக்ஷ்மி, கொம்மியுனிக்கேசன்)
ஆறுகால் மடம்)

03 – 02 - 2001 அன்று அகால மரணமடைந்த செல்வன் தயானந்தன் வாகீசனின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருமதி செ. மகேஸ்வரி
செ. மகேந்திரராசா (குடும்பம்)
செ. ரவீந்திரன் (குடும்பம்)
புது வீதி, இ. பத்மநாதன் (குடும்பம்)
ஆறுகால்மடம், கு. ஞானசேகரம்.
ஆனைக்கோட்டை.

(83784)



## கண்ணீர் அஞ்சலி

யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய
உப அதிபர்
திரு. த. சொக்கலிங்கம்
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி அன்னப்பிள்ளை தம்பையா

அவர்கள் இறைபதம் அடைந்தமையையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு கண்ணீரால் அஞ்சலி செய்கின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்.

(83794)



நயினாதீவு

## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலில் தைப்பூசத் திருவிழா 7-2-2001

**அம்பிகை அடியார்களே!**

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் தைமாதம் 25 ஆம் திகதி (07-02-2001) புதன்கிழமை தைப்பூசத் திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற அம்பிகையின் திருவருளால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அன்றையதினம் பகல் அம்பாளுக்கு அஷ்டோத்திர சங்காபிஷேகமும் அதனைத் தொடர்ந்து விசேட பூசையுடன் தீபாராதனைகளும் இடம்பெற்று

**இரவு மின் அலங்காரம் செய்யப்பட்ட சிற்பவேலைப்பாடமைந்த அழகிய திருமஞ்சத்தில் அம்பாள் திருவீதியுலா வரும் அலங்காரக் காட்சியும் இடம்பெறவுள்ளது.**

அடியார்கள் அனைவரும் வருகை தந்து அம்பிகையைத் தரிசித்து அம்பிகையின் இஷ்டசித்திகளைப் பெற்றின்புறுமாறு வேண்டுவதுடன், நாட்டில் சாந்தியும், சமாதானமும் நிலவி, எங்கும் அன்பும், அருளும், அமைதியும் நிலைத்து, அனைத்து மக்களும் நல்லனவெல்லாம் பெற்று வாழவேண்டியும் அம்பிகையைப் பிரார்த்திக்கின்றோம்.

விசேட மேள வாத்தியம்
நாதஸ்வர சிரோன்மணி
V. K. கானமூர்த்தி குழுவினர்
கோண்டாவில்.

திரு. கூ. பரராசசேகரம் குடும்பத்தினர்
தைப்பூச உபயகாரர்கள்
(83781) நயினாதீவு/கனடா.


## வருடாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 6 சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

(க—10)

## மருத்துவ சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப் .6 யாழ். மருத்துவ சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலையின் மருத்துவ மாணவர் விரிவுரை மண்டபத்தில் நடைபெறும்.

(க—10)

## கோண்டாவில் கிழக்குப் பகுதியில் கல் உடைக்கும் ஆலையை நிறுவ ஊர்மக்கள் ஆட்சேபம்

கோப்பாய், பெப். 6 கோண்டாவில் கிழக்கு கொட்டைக்காடு வீதியில் கல் உடைக்கும் ஆலை அமைப்பதற்கு அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

கோப்பாய்—கைதடி வீதியில் அமைந்திருந்த இந்த ஆலையை கோண்டாவில் பகுதியில் அமைப்பதற்கு நல்லூர் பிரதேச சபை அனுமதி வழங்கியுள்ளது. அதைத் தொடர்ந்து அப் பகுதியில் ஆலை அமைக்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

குடியிருப்புக்கள், விவசாய நிலங்கள் அப் பகுதியில் காணப்படுவதைச் சுட்டிக் காட்டியுள்ள மக்கள் கல் உடைக்கும் ஆலை அமைக்க ஆட்சேபம் தெரிவித்து வருகின்றனர்.

இது குறித்து கோண்டாவில் ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயக சனசமூக நிலைய நிர்வாகத்தினர் மற்றும் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோர் நல்லூர் பிரதேசசபை அலுவலகத்திற்கு கடிதங்களை அனுப்பியுள்ளனர்.

(க-72)

## முத்திரைகளுக்குத் தட்டுப்பாடு

வலி. மேற்கு, பெப். 6 வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் வான் கடிதங்களுக்கும் முத்திரைகளுக்கும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

சுழிபுரம், வட்டுக்கோட்டை சித்தன்கேணி ஆகிய இடங்களிலுள்ள தபாற்கந்தோர்களில் கடந்த சில நாள்களாக வான் கடிதங்கள் மற்றும் 5 ரூபா, 10 ரூபா, 20 ரூபா பெறுமதியான முத்திரைகள் இல்லை எனத் தெரிகின்றது.

இதனால் பொது மக்கள் தனியார் கடைகளில் அதிக விலை கொடுத்து இவற்றை வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. [க-175]


## கலந்துரையாடல்

யாழ் பல்கலைக்கழக அனைத்து வருட வணிகத் துறை மாணவர்களுக்குமான கலந்துரையாடல் இன்று 06 02.2001 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு வணிகத்துறை மண்டபம் II [ CH2 ] நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

வணிக மாணவர் மன்றம்
யாழ் பல்கலைக்கழகம்.

(83799)



## முக்கிய அறிவித்தல்

நாளை (07-02-2001) புதன்கிழமை
சனி, ஞாயிறு நேர அட்டவணையின்படி சகல வகுப்புகளும் நடைபெறும்.

**SCIENCE COLLEGE**
**NEW SCIENCE HALL**

கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

(83793)



## ஸ்ரீ நாகஷணி அம்பாள் தேவஸ்தானம்

சிரணி சண்டிலிப்பாய்

### திருவுருவாக்கல் விழா

வள்ளி தெய்வயானை சமேத ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி உருநாடு திருவுருவாக்கல் விழா நாளை (07 - 02 - 2001) புதன்கிழமை தைப்பூசத்தினத்தில்

சிற்ப கலாநிதி. சு சரவணபவன்
(மதிவதனன் சிற்பாலயம்)

தலைமையில் ஆலய முன்றிலில் நிகழ இருப்பதால் அடியார்கள் பவுண், வெள்ளி, செம்பு ஆகியவற்றை காலை 8 மணிக்கு முன் உங்கள் சந்ததியின் பெயர் துலங்க வார்ப்பில் சேர்த்து முருகன் அருள் பெற வேண்டுகின்றோம்.

(83796) தர்மகர்த்தா சபை



உ
சிவமயம்

## ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம்

நாளை (07–02–2001) புதன்கிழமை

### தைப் பூசத் திருவிழா

காலை 11 மணியளவில் முருகப்பெருமான் வீதி வலம் வருவார். அத்துடன் அபிஷேகங்கள், விசேட பூசைகள் நடைபெறும். அடியார்கள் வந்து முருகப் பெருமானின் அருளைப் பெறுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

[அடியார்களுக்காக போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன.]

திருவிழா உரிமையாளர்
து. ராஜராஜன் (திசன்).

(83805)

# யாழ்.பண்ணைப் பகுதியில் பொலீஸ் பிரேத அறை

## ஒரு கோடி ரூபா செலவில் நிர்மாணம்

யாழ்ப்பாணம்,பெப்.6

யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் நவீன வசதிகளுடன் கூடிய பொலீஸ் பிரதே அறைக் கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

30 சடலங்களை பாதுகாப்பாக வைத்திருக்கக் கூடியதாக நிறுவப் படவிருக்கும் இக்கட்டடத்துக்கான நிதியை வடக்கின் மீள் குடியமர்வு புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபை ஒதுக்கியுள்ளது.

இக்கட்டடத்துக்கு ஒரு கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் கட்டட வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்றும் செயலக அதிகாரி ஒருவர் கூறினார்.

இந்தப் பிரேத அறை அமைக்கப் பட்டதும் யாழ். போதனா வைத்திய சாலையில் அடையாளம் காண்பதற்காக ஒப்படைக்கப்படும் சடலங்கள் இங்கு ஒப்படைக்கப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-5)



**இலங்கை செஞ்சிலுவைச் சாங்க யாழ்.கிளையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம் கிளையின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட வைத்திய கலாநிதி வை.தியாகராசாவிடம் பொறுப்புக்களைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.**

**கிளையின் உபதலைவர் கு.பாலகிருஷ்ணன், செயலாளர் தி.உதயசூரியன், பொருளாளர் வைத்திய கலாநிதி எஸ்.எஸ்.அருளாநந்தம் ஆகியோரும் கிளைக் குழு உறுப்பினர்கள் சிலரும் அருகில் காணப் படுகின்றனர்.**

**புதிய தலைவராகப் பொறுப்பேற்ற பின்னர் வைத்திய கலாநிதி வை.தியாகராசா உரையாற்றுவதை அடுத்துள்ள படத்தில் காணலாம். (ம)**

# நயினையில் தைப்பூச விழா; விசேட போக்குவரத்து வசதி

யாழ்ப்பாணம்,பெப்.6

நயினாதீவு ஸ்ரீநாகபூசணி அம்மன் ஆலயத்தில் நாளை புதன் கிழமை தைப்பூசத் திருவிழா சிறப்பாக நடைபெறும். அன்றைய தினம் பகல் அம்பாளுக்கு அஷ்டோத்திர சங்காபிஷேகமும் அதனைத் தொடர்ந்து விசேட பூசையுடன் விசேட தீபாராதனையும் இடம்பெறும். இரவு மின்னலங்காரம் செய்யப்பட்ட சிற்ப வேலைப்பாடமைந்த அழகிய திருமஞ்சத்தில் அம்பாள் திருவீதியுலா வருவார்.

தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டு யாழ்.குடாநாட்டின் பல பாகங்களிலிருந்தும் பெருந்தொகையான அடியார்கள் வருகை தருவார்கள் என்பதால் விசேட போக்குவரத்து மற்றும் விசேட படகுச் சேவை அன்னதானம், தாகசாந்திச் சேவைகளுக்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இரவு தங்கிச் செல்ல விரும்பும் அடியார்களின் நலன் கருதியும் பொருத்தமான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அம்பிகையைத் தரிசிப்பதற்காக வருகைதரும் யாத்திரிகர் தங்குவதற்காக ஆலய வடக்கு வீதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள "ஸ்ரீ அன்னபூரணி" "ஸ்ரீ புவனேஸ்வரி" ஆகிய யாத்திரிகத் திருமண்டபங்களின் திறப்பு விழாவும் அன்றைய தினம் நண்பகல் 12.15 மணிக்கு சுபவேளையில் இடம்பெறும்.

(மற்றொரு செய்தி 6ஆம் பக்கத்தில்)

## மீசாலை இளைஞர் மிதிவெடியில் சிக்கி காலை இழந்தார்

நெல்லியடி,பெப்.6

மீசாலை தெற்கு அல்லாரைக்கு வீடு பார்க்கச் சென்ற இளைஞர் ஒருவர் மிதிவெடியில் சிக்கி இடது காலை இழந்தார். இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இடம்பெயர்ந்து வல்வெட்டித் துறை ஊறணியில் வசித்து வரும் வேலும் மயிலும்- சிவபாலன் (வயது18) என்ற இந்த இளைஞர் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டுள்ளார். (க-109)

# உரும்பிராய்க் கடைகளில் மரக்கறி விற்பனைத் தடையால் பாவனையாளர் பெரிதும் பாதிப்பு

உரும்பிராய்,பெப்.6

உரும்பிராயில் மரக்கறி வியாபாரம் செய்வதற்கு வர்த்தக நிலையங்களுக்கு தடை விதிக்கப்பட்டமையால் பாவனையாளர்கள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

உரும்பிராய் பொதுச்சந்தை வியாபாரிகள் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து வலி. கிழக்குப் பிரதேச சபை இத்தடையை விதித்துள்ளது. சந்தை வியாபாரிகள் தமது விற்பனை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக முறையிட்டிருந்தனர்.

சுன்னாகம், மருதனார்மடம் சந்தைகளுடன் ஒப்பிடும் போது உரும்பிராய்ச் சந்தையில் மரக்கறி வகைகளின் விற்பனை விலை மிக அதிகமாக இருந்து வருகிறது. இதனால் பாவனையாளர்கள் இங்கு கொள்வனவு செய்வதைத் தவிர்த்து வருகின்றனர். வாகன வசதியுள்ளவர்கள் சுன்னாகம், மருதனார்மடம் சந்தைகளுக்குச் சென்று சில நாள்களுக்குத் தேவையானவற்றை மொத்தமாக வாங்கி வருகின்றனர்.

கடந்த சில மாதங்களாகச் சில வர்த்தக நிலையங்கள் மரக்கறி வியாபாரத்தை ஆரம்பித்து சுன்னாகம், மருதனார்மடம் சந்தைகளின் விலைக்கு விற்பனை செய்தன. இதனால் பாவனையாளர்கள் பெரிதும் பயனடைந்தனர் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது. (க-154)

## வலி.கிழக்கில் வீதிகளைத் திருத்த 45 லட்சம் ரூபா ஒதுக்கீடு

கோப்பாய்,பெப்.6

வலி.கிழக்குப் பிரதேசத்தில் மிகவும் சேதமடைந்துள்ள 4 வீதிகளைத் திருத்துவதற்கு 45 லட்சத்து 40 ஆயிரம் ரூபாவை வடக்கு மீள் குடியமர்வு, புனர்வாழ்வு, அதிகார சபை (ரான்) வழங்கியுள்ளது.

அச்செழு வினோபாஜி வீதிக்கு 13 இலட்சம் ரூபாவும், நீர்வேலி வெள்ளவாய்க்கால் வீதிக்கு 11லட்சத்து 60 ஆயிரம் ரூபாவும், உலவிக்குளம் பிள்ளையார் கோயில் வீதிக்கு 8 லட்சத்து 90 ஆயிரம் ரூபாவும், புத்தூர் குமாரசாமி வீதிக்கு 11லட்சத்து 90 ஆயிரம் ரூபாவும் வலி. கிழக்குப் பிரதேசசபைத் தலைவர் பூ.குணசிங்கத்தால் பெறப்பட்டு வீதிகள் புனரமைப்பதற்கான ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (க-72)

## மூன்றாவது தடவை கடையில் திருட்டு

அச்சுவேலி,பெப்.6

ஆவரங்கால் சந்தியிலுள்ள மருந்து விற்பனை நிலையத்தில் மூன்றாவது தடவையாக பொருள்கள் திருட்டுப்போயுள்ளன.

இந்தக்கடையில் இரவு வேளையில், பாம்ஸா வகைகள், பிஸ்கட்டுகள் மற்றும் உணவுப்பொருள்கள் அபகரிக்கப்பட்டுள்ளன. (க-11)

## அச்சுவேலியில் நிரந்தரமாக மக்கள் வங்கிக் கிளை

அச்சுவேலி,பெப்.6

அச்சுவேலி மக்கள் வங்கி கரும பீடம் நிரந்தரக் கிளையாகச் செயற்படவுள்ளது. இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் பூர்த்தியடைந்துள்ளன.

அச்சுவேலியில் கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் நடுப்பகுதியில் செயற்படத் தொடங்கிய யாழ் ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கிக் கிளையின் நடமாடும் கரும பீடத்தில் இதுவரை ஆயிரத்துக்கு மேற்பட்ட கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வாடிக்கையாளரின் வசதியைக் கருத்தில் கொண்டு அச்சுவேலி மக்கள் வங்கிக்கிளை அச்சுவேலி பொதுச்சந்தையின் மேல்மாடியில் செயற்படவுள்ளது. (க-11)

## அச்சுவேலி ஆஸ்பத்திரியை தரமுயர்த்த நடவடிக்கை

கோப்பாய்,பெப்.6

அச்சுவேலி அரசினர் வைத்திய சாலையை மாவட்ட வைத்தியசாலையாகத் தரமுயர்த்துவதற்கு வலி. கிழக்கு பிரதேச சபை நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது.

இந்த வைத்தியசாலையில் வசதிகள் குறைவாக இருப்பதனால் மேலதிக சிகிச்சைக்காக பல கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள யாழ்போதனா வைத்தியசாலைக்கே நோயாளர்கள் பல சிரமத்தின் மத்தியில் செல்ல வேண்டி உள்ளது.

இதனைத் தவிர்க்கும் முகமாக இவ்வைத்தியசாலைக்கு பல நவீன உபகரணங்களைப் பெற்றுக்கொடுத்து மாவட்ட வைத்தியசாலையாகத் தரமுயர்த்துவதென்று கடந்த மாதம் 22 ஆம் திகதி நடைபெற்ற வலி. கிழக்கு பிரதேச சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கான நடவடிக்கையை பிரதேச சபைத் தலைவர் பூ.குணசிங்கம் சுகாதார அமைச்சுடன் தொடர்பு கொண்டு எடுத்து வருகின்றார். (க-72)

## மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்.6

யாழ்புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் அருட் செல்வி ஜீ.செல்வராணி தலைமையில் நடைபெறும் இப்போட்டியில் பிரதம விருந்தினராக பேராசிரியர் ஆர். குமாரவடிவேலுவும் சிறப்பு விருந்தினராக உதவிக்கல்விப் பணிப்பாளர் ஏ.இராஜகோபாலும், கௌரவ விருந்தினராக அருட்தந்தை ஆர்.எம்.ஜி.நேசநாயகமும் கலந்து கொள்வர். (க-5)

## மாடுகள் திருடிய நபர் சிக்கினார்

கோப்பாய்,பெப்.6

அச்செழுப்பகுதியில் மாடுகளைத் திருடியவர் அப்பகுதி கிராம அலுவலகராலும், பொதுமக்களாலும் தேடிப்பிடிக்கப்பட்டு அச்சுவேலிப் பொலஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் இப்பகுதி விவசாயின் பெறுமதி மிக்க மூன்று மாடுகள் திருட்டுப் போய் இருந்தன. அந்த மாடுகளுடனேயே இருபாலை கிழக்கைச் சேர்ந்த நபர் பிடிபட்டார். (க-72)

## கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் நிர்வாகசபை உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு கந்தர்மடத்தில் உள்ள அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (ஐ)

## கலாசார திணைக்கள அலுவலகம் திறப்பு

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் புதிய அலுவலகத்தின் திறப்புவிழா நாளை புதன் கிழமை நடைபெறும்.

காலி வீதியில் அமைந்துள்ள இத் திணைக்களத்தை வடக்கின் அபிவிருத்திப் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு- கிழக்கின் தமிழ் விவகார, இந்துசமய கலாசார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நண்பகல் 12 மணிக்குத் திறந்து வைப்பார். (ஐ)

## முருகன் புகழ் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,பெப்.6

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையினால் நடத்தப்படும் முருகன் புகழ் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும்.

யாழ்.செயலக நிர்வாக உத்தியோகத்தர் வே.வீரகத்திப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வரவேற்புரையை பண்டிதர் கமுத்துவேலுவும் சிறப்புரையை சி.சக்திகிரனும், வெளியீட்டுரையை பேராசிரியர் நா.ஞானகுமாரனும் நிகழ்த்தவுள்ளனர். (க-5)



**அண்மையில் வடமாகாண தாச்சிச் சங்கத்தினால் நடத்தப்பட்ட தாச்சிச் சுற்றுப் போட்டியில் வெற்றி பெற்று முதலாம் இடத்தை தட்டிச் சென்ற நவாலி தென்றல் வி.கழக அணித் தலைவர் க.நிசாந்தன் வர்த்தக வங்கி முகாமையாளர் எஸ்.ரவீந்திராவிடமிருந்து வெற்றிக் கேடயத்தைப் பெற்றுக் கொள்கிறார். (ம-86)**

## நெடுந்தீவு மேற்கில் மதகுகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.6

நெடுந்தீவு மேற்கில் உள்ள இரண்டு பெரிய மதகுகள் இந்த வருடம் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

அத்தாங்கரை மதகு, கலன்னாற்று மதகு ஆகியனவே நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன என நெடுந்தீவு மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் க. அறிவரசன் தெரிவித்தார்.

மேற்படி மதகுகளின் புனரமைப்புத் தொடர்பான முதற்கட்ட நடவடிக்கையாக நீர்ப்பாசனத் திணைக்களத்தைச் சேர்ந்த திருநித்தியானந்தன், க.ஜெகதீஸ்வரன் ஆகிய அலுவலர்கள் நெடுந்தீவுக்கு விஜயம் செய்து அழிவடைந்த நிலையில் உள்ள மதகுகளைப் பார்வையிட்டனர் எனவும்.

நெடுந்தீவு மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கமும் ஐக்கிய தீப சமூகப் பொருளாதாரக் கல்விக் கழகமும் மதகுகளின் புனரமைப்புக்குத் தம்மாலியன்ற உதவிகளைச் செய்யும் எனவும் -

அவர் தெரிவித்தார். (ஐ-7)

## சட்டவிரோத மின்பாவனையாளர் அதிகரிப்பு

அச்சுவேலி,பெப்.6

அச்சுவேலிப் பகுதியில் சட்ட விரோத மின்சாரப் பாவனை நாளாந்தம் அதிகரித்து வருகின்றது.

இது தொடர்பாக மின்சாரசபையினர் நடவடிக்கை எடுக்காமல் இருப்பதால் சட்டவிரோத மின்சாரப் பாவனை அதிகரித்து வருவதாக பாவனையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (க-11)

## கோண்டாவில் வாசிக்கு விளக்கமறியல் உத்தரவு

யாழ்ப்பாணம்,பெப்.6

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவரை எதிர்வரும் 20 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கோண்டாவிலைச் சேர்ந்த இராஜமனோகரன் கிருபாகரன் என்பவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (க-5)

# தைப்பூசத்தை ஒட்டி நயினை செல்லும் பத்தர்களுக்கு வசதிகள்

## பிரதேச சபைத் தலைவர் கோரிக்கை

வேலணை,பெப்.6

தைப்பூசத் தினத்தை முன்னிட்டு நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்திற்கு பெரும் எண்ணிக்கையான அடியார்கள் அம்பாளைத் தரிசிக்க வரவுள்ளதால் அன்றைய தினம் கூடுதலான பஸ்களை சேவையில் ஈடுபடுத்துமாறு வேலணை பிரதேச சபைத் தலைவர் ந.கருணாகரகுருமூர்த்தி வடபிராந்திய போக்குவரத்துச் சபை பொது முகாமையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்தோடு அன்றைய தினம் கூடுதலான படகுகளை சேவையில் ஈடுபடுத்துவதோடு, படகுகளில் அளவுக்கதிகமான அடியார்களை ஏற்றி அவர்களுக்கு சிரமம் கொடுக்காது அளவோடு பயணிகளை ஏற்றி இறக்குவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறும் காரைநகர் கடற்படை கட்டளை அதிகாரிக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

குறிகாட்டுவான் இறங்குதுறைப் பகுதியில் அடியார்கள் தங்கி இளைபாறுவதற்கு தற்காலிக கொட்டகை வசதிகளும், தாகம் தீர்ப்பதற்கு குடிதண்ணீர் வசதிகளும் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-167)

### செஞ்சிலுவைச் சங்கம் அழைப்பு

மாசேரி, வரணியைச் சேர்ந்த கிட்டிணபிள்ளை அம்பலவாணர் என்பவரை தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது. (க-5)

### பளை மத்திய கல்லூரி புதிய இடத்தில்

தென்மராட்சி,பெப்.6

பளை மத்திய கல்லூரி புலோலி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் காலை நேரப் பாடசாலையாக இயங்கவுள்ளதாகக் வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராஜா அறிவித்துள்ளார்.

பளை மத்திய கல்லூரி இதுவரை புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் மாலை நேர வகுப்பாக இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-117)

## சப்ரகமுவ பல்கலைக்கழக

# நில அளவை விஞ்ஞானத்துறை மாணவர்களின் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம்,பெப்.6

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் 2000 - 2001 கல்வி ஆண்டில் நில அளவை விஞ்ஞானத்துறைக்கு அனுமதிபெற்ற மாணவர்களிற்கான வகுப்புக்கள் எதிர்வரும் மார்ச் 5 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

இவர்களிற்கான ஆங்கிலப் பரீட்சை எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 10 மணிக்கு பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

விடுதி வசதி தேவையான மாணவர்களை எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 9மணிமுதல் மாலை 5மணி வரை சிங்கராஜா - சமனல விடுதித் தலைவரைச் சந்திக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மறுநாள் 19 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள அறிமுக நிகழ்வில் புதிய மாணவர்களைக் கலந்துகொள்ளுமாறு சப்ரகமுவ பல்கலைக்கழகத் துணைவேந்தர் அறிவித்துள்ளார். (ஐ)

### விபத்தில் பலி

வவுனியா,பெப்.6

வவுனியாவின் எல்லைக் கிராமமான மாமடுவில் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் படையினரின் டிரக் ஒன்றும் மற்றொரு மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவர் பலியானார்; பின்னால் இருந்து சென்றவர் படுகாயமடைந்தார்.

அவர் அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-3-164)

# பிரார்த்திக்கின்றோம்

07.01.2001இல் கொழும்பில் இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்



தோற்றம் 1935 - 01 - 08

மறைவு 07 - 01 - 2001

**அமரர் சின்னத்தம்பு விஜயதர்மரட்ணம்**

(ஓய்வு பெற்ற பிரதம லிகிதர், ஓய்வூதியத் திணைக்களம்)

எமது அன்புத் தந்தையே!
எம் குடும்ப ஒளிவிளக்கே!
எம் உயர்வு காண்பதற்கே
ஓயாது உழைத்த எந்தாய்!
அம்மாவைப் பிரிந்த எமக்கு
ஆறுதல் நீ தந்தாயே!
தந்தையும், தாயுமாய்
எமை அணைத்த சேயோனே!
உம் பிரிவால் வாடுகின்றோம்
ஆறுதல் கூற யாருமில்லை
மாதமொன்று போனாலும்
மறப்போமோ உம் நினைவை
அடைக சாந்தியென
ஆண்டவனைப் பிரார்த்திப்போம்
சாந்தி! சாந்தி!!

பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

*செருக்கப்புலம்,*
*தெல்லிப்பழை.*

(83693)

### ஆன்மீக நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம்,பெப்.6

திருநெல்வேலியில் உள்ள யாழ். பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தில் போயா ஆன்மீக நிகழ்ச்சிகள நாளை புதன்கிழமை காலை 9 மணி முதல் நடை பெறவுள்ளன.

இலட்ச அர்ச்சனை, பண்ணிசை, பஜனை, சிறப்புச் சொற்பொழிவு என்பன இடம்பெறும். நண்பகல் நாராயண சேவையும் நடைபெறும். (ஐ)

### கோப்பாய் ஆஸ்பத்திரி விடுதியில் நெருக்கடி

கோப்பாய் அரசினர் வைத்தியசாலையின் நோயாளர் விடுதியில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடியால் நோயாளர் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

சாதாரண மருத்துவ சிகிச்சைக்காக அமைக்கப்பட்ட பெண்கள் விடுதியின் ஒரு பகுதி தென்மராட்சி இடம்பெயர்வினைத் தொடர்ந்து காசநோயாளர் சிகிச்சைக்குரிய விடுதியாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மழை காரணமாக காசநோயாளர்கள் இடநெருக்கடியால் ஈரலிப்பான தரையில் படுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (க-72)

### மாணிக்ச வாசகர் வித்தியாலய நூற்றாண்டு விழா

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய நூற்றாண்டு விழா இவ்வாண்டு கொண்டாடப்பட உள்ளது.

விழாவின்போது வித்தியாலயத்துக்கு காணி வழங்கி கட்டடங்கள் அமைத்த பெரியார்கள், புகழ்பூத்த அதிபர்கள் மற்றும் உயர்ந்த நிலையில் வாழும் இவ் வித்தியாலய பழைய மாணவர்கள் ஆகியோர் கௌரவிக்கப்படுவதுடன், சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்படும்.

நூற்றாண்டு விழாவை ஒட்டி இவ் வித்தியாலயத்துக்கு முன்பாக உள்ள வீதி 90 ஆயிரம் ரூபா செலவில் கரவெட்டிப் பிரதேச சபையினால் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. (க-173)

### தேர்தல் கடமை கொடுப்பனவு இதுவரை இல்லை

வடமராட்சி,பெப்.6

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் நடைபெற்ற பொதுத்தேர்தலின் போது தேர்தல் கடமை புரிந்த வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு தேர்தல் கடமைக்கான கொடுப்பனவுகள் இன்னமும் வழங்கப்படவில்லை.

கடமை தொடர்பான விவரங்களை குறிப்பிட்ட ஆசிரியர்கள் உரிய காலத்தில் அனுப்பி வைத்துள்ள போதிலும் பல மாதங்களாகியும் கொடுப்பனவு வழங்கப்படாதது குறித்து விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-173)

### மானிப்பாய் இந்துவை தரமுயர்த்தக் கோரிக்கை

வலி.தென்மேற்கு,பெப்.6

மானிப்பாய் இந்துக் கல்லூரியை தேசிய கல்லூரியாக தர முயர்த்த வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய்-பிரதேச சபை விரைவில் நகரசபையாக மாற்றப்படவுள்ளது. அதே நேரம் வலிகாமம் பகுதியில் உள்ள தரமுயர்ந்த பாடசாலையான மானிப்பாய் இந்துக்கல்லூரியை தேசிய கல்லூரியாக மாற்றி மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துமாறு பிரதேச சபைக் கூட்டத்தில் மா.மனோகரன் கேட்டுக் கொண்டார். (க-185)

### யோகாசன வகுப்புகள்

யாழ்ப்பாணம்,பெப்.6


நல்லூரில் உள்ள திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் யோகாசன வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. தினமும் காலை 6 மணி முதல் 7 மணிவரை ஆண், பெண் இருபாலாரும் இந்த வகுப்புகளில் கலந்து கொண்டு வருகின்றனர். (ஐ)

### மதுசார உற்பத்தி ஆரம்பம்

வலிகாமம் பனை தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியால் நடத்தப்படும் நவாலியிலுள்ள வலிகாமம் வடிசாலையில் பருவகால மதுசார உற்பத்தி கடந்த 3ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடிசாலை இயங்க ஆரம்பித்துள்ளதால் சங்கக் கிளைகளில் மீதமாக இருக்கும் கள், சாராய உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் என்று கொத்தணியின் தலைவர் நா.கணேசன் தெரிவித்தார். (க-5)

# முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

HAPPY  BIRTHDAY

## செல்வன் தீபாகரன் நிதர்சன்

தீபாகரன் - மங்கையர்க்கரசி **தம்பதிகளின** செல்வப் புதல்வன் **நிதர்சன்** தனது முதலாவது பிறந்த நாளை இன்று (2001.02.06) செவ்வாய்க்கிழமை லண்டனில் உள்ள தனது இல்லத்தில் அப்பா, அம்மாவுடன் மிகச் சிறப்பாகக் கொண்டாடுகிறார்.

இவரை அம்மப்பா, அம்மம்மா, சித்தி, அப்பப்பா, அப்பம்மா, மாமிமார், மாமாமார் மச்சான், மச்சாள்மார், நோர்வேயிலுள்ள பாட்டி, சின்ன அம்மப்பா குடும்பம், கனடாவிலுள்ள குட்டி அம்மப்பா குடும்பம் மற்றும் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் அம்மன் அருளுடன் சகல சௌபாக்கியங்களும் பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்க என்று வாழ்த்துகின்றார்கள்

**ந.குணசீலன்**
குடும்பத்தினர்

*வீ.மு.தெரு,*
*பருத்தித்துறை.*

(C/15159)

# முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

HAPPY  BIRTHDAY

## செல்வன் விஜயரட்ணம் விஜயராஜ்

குடத்தனையைச் சேர்ந்த **விஜயரட்ணம் - நவலீலாவதி** தம்பதிகளின் செல்வப் புதல்வன் **விஜயராஜ்** தனது முதலாவது பிறந்த நாளை இன்று (06-02-2001) செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், பேரன்மார், அக்காமார், தம்பிமார், உற்றார், உறவினர்கள் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றார்கள்.

**த.விஜயரட்ணம்**
(தந்தை)

*குடத்தனை*

(C/15160)

## வதிரி காளையன் தோட்டம்

# அருள்மிகு முத்துக்குமாரசுவாமி கோயில்

## புதிய சித்திரத் தேர் நிர்மாணிப்பு நாள் வேலை

மெய்யடியார்களே!

நிகழும் தைப்பூசத் திருநாள் நாளை தைத்திங்கள் 25ஆம் நாள் (7.2.2001) புதன்கிழமை காலை 10.30 தொடக்கம் 11.30 மணி வரையுள்ள சுப வேளையில் முருகப்பெருமானுக்கு புதிய சித்திரத்தேர் நிர்மாணிப்பதற்கு திருவருள் கூடியுள்ளது. மேற்படி சுபவேளையில் கலாபூஷணம் சுப்பிரமணியம் இராசரத்தினம் (விநாயகர் சிற்பாலயம், திருநெல்வேலி) குழுவினரால், நிர்மாணிப்பதற்கான நாள் வேலை ஆரம்பிக்கப்பட உள்ளது. மெய்யடியார்களே மேற்படி வைபவத்தில் பங்குபற்றி இறை அருள் பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஆலய அறங்காவலர்சபை.

தலைவர்
வீ. இராசையா.

(83755)

# கொழும்பு - திருகோணமலை ரயிலில் தமிழ்ப் பயணிகளிடம் கொள்ளை!

கொழும்பு,பெப்.6

கொழும்பில் இருந்து திருமலைக்குப் புறப்பட்ட பயணிகள ரயிலில் ஆறுபேர் கொண்ட கொள்ளைக் கோஷ்டி நேற்று முன்தினம் ஞாயிறு அதிகாலை கொள்ளையில் ஈடுபட்டுள்ளது.

சுமார் ஐந்து லட்சம் ரூபாவுக்கும் அதிகமான பணம், நகைகள் கொள்ளையிடப்பட்டதாகப் பயணிகள் தெரிவித்தனர்.

இந்த ரயிலில் பயணம் செய்த திருமலையைச் சேர்ந்த பயணி ஒருவர் இக்கொள்ளை குறித்துத் தெரிவித்ததாவது:-

கொழும்பு கோட்டையில் இருந்து இரவு 10 மணிக்கு ரயில் புறப்பட்டது இரவு 11 மணியளவில் ராகமையில் ஆறுபேர் ரயிலில் ஏறினார்கள். பயணிகளோடு பயணிகளாக அவர்களும் அமர்ந்து கொண்டனர். அதிகாலை 4.15 மணியளவில் மழை பெய்து கொண்டிருந்தது. ரயில் பெட்டியின் ஜன்னல்கள் மூடப்பட்டிருந்தன. பயணிகளோடு பயணிகளாக இருந்த ஆறுபேரும் எழுந்து ரயில் பெட்டிகளின் கதவுகளை மூடினர். நால்வர் கத்திகளை வைத்திருந்தனர். இருவரின் கைகளில் பிஸ்டல்கள் இருந்தன.

பயணிகளை மிரட்டி அவர்களிடமிருந்து பணம், நகைகளை கொள்ளையிட ஆரம்பித்தனர்.

பயணஞ் செய்தவர்களில் 90 சதவீதமானோர் தமிழர்கள் காளி கோயில் மகாகும்பாபிஷேகத்திற்கு திருமலைக்குப் பயணத்தை மேற்கொண்டவர்களும் இருந்தனர். கொள்ளைக்காரர்களில் ஒருவர், பெண் ஒருவரின் கழுத்திலிருந்து தாலிக்கொடியைப் பிடுங்கி எடுக்க முயற்சித்தார். அதனைத் தடுக்கப்போன கணவனின கையை இன்னொரு கொள்ளைக்காரன் வெட்டினான். முரண்டு பிடித்த பயணிகளைக் கொள்ளைக்காரர்கள் கத்தியால் குத்திக் காயப்படுத்தினார்கள். பயணிகள் பீதியில் இருந்தனர். அதிகாலை 4 மணியளவில் நாயகம ரயில் நிலையத்தில் நின்றது. கொள்ளையர்கள் ரயிலில் இருந்து இறங்கி இருளில் மறைந்தனர்.

பயணிகள் நாயகம ரயில் அதிகாரிகளிடம் முறையிட்டனர். அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. ரயில் மீண்டும் புறப்பட்டு கல்லோயா ரயில் நிலையத்தை வந்தடைந்தது. பயணிகள் தங்களுக்கு நேர்ந்த இன்னல்களைப் பொலீஸாரிடம் தெரிவித்தனர். பொலீஸார் முறைப்பாடுகளைப் பதிந்து கொண்டனர்.

"காயமடைந்த பயணிகளுக்கு சிகிச்சையளிக்க நடவடிக்கை எடுக்கவில்லை"பெண்கள் அவமானப்படுத்தப்பட்டதை சகிக்க முடியாது எல்லாவற்றையும் நேரில் கண்டு மனம் வெதும்பினேன். நடந்த சம்பவங்களை என்னால வர்ணிக்க முடியாமல் உள்ளது - என்று அவர் தெரிவித்தார்.(ஐ)

# புலிகளை தடை செய்யக்கோரி 'சிஹல உறுமய' கட்சி கையெழுத்து வேட்டை

கொழும்பு,பெப்.6

பிரித்தானியாவில் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்யும்படி கோரி சிஹல உறுமயக் கட்சி பத்து லட்சம் பேரின் கையெழுத்துடன் மகஜரொன்றை பிரித்தானிய நாடாளுமன்றத்திடம் கையளிக்கவுள்ளது.

இம்மகஜருக்கான கையெழுத்து வேட்டை இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளதாக அக்கட்சியின் தலைமையகப் பேச்சாளர் கூறினார்.


கொழும்பு, கண்டி, கம்பஹா, பதுளை, களுத்துறை, மாத்தறை உட்பட பல மாவட்டங்களில் இக் கையெழுத்துக்கள் திரட்டப்படும். பொதுமக்கள் கூடுமிடங்கள், பஸ் நிலையங்கள், புகையிரத நிலையங்கள் உட்பட பல இடங்களில் இக்கையெழுத்துக்கள் விசேடமாகத் திரட்டப்படும் எனவும் அவர் கூறினார்.

இக்கையெழுத்து வேட்டை இம்மாதம் 18ஆம் திகதியுடன் முடிவுறும். அதே தினம் பத்து லட்சம் பேரின் கையெழுத்துடனான இம்மகஜர் லண்டனிலுள்ள சிஹல உறுமய கட்சியின் அலுவலகத்துக்கு அனுபப்பட்டு பிரித்தானிய நாடாளுமன்றத்திற்குக் கையளிக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

பிரித்தானியாவில் பயங்கரவாத அமைப்புகளைத் தடைசெய்யும் பட்டியலில் புலிகள் இயக்கத்தையும் சேர்க்க வேண்டுமெனக் கோரியே இம் மகஜர் கையளிக்கப்படவிருப்பதாக அவர் தெரிவித்தார். (ஐ)

இந்தியாவின் புட்டபர்த்தியில் அமைந்துள்ள ஸ்ரீ சத்ய சாயி சுப்ப ஸ்பெஷலிட்டி மருததுவ மனையின் மாதிரித் தோற்றம் இது.

வடபிராந்திய ஸ்ரீ சத்ய சாயி நிறுவனங்களின் இளைஞர் பிரிவினர் அண்மையில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் நடத்திய மனித மேம்பாடுகள் ஊடாக ஆன்மீகம் என்ற



கண் காட்சியில் பலரது கவனத்தையும் ஈர்த்த காட்சி பொருளாக இது அமைந்தது. (ஐ)

# ஹோட்டல் பணியாள்களுக்கு வைத்திய பரிசோதனை!

தேநீர்க் கடை மற்றும் சாப்பாட்டுக் கடைகளில் பணிபுரிபவர்கள் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை எல்லைக்குள் கடமையாற்றும் பணியாளர்கள் சுகாதார மற்ற முறையில் உணவுகளை உற்பத்தி செய்வதாகவும் ·

அவர்கள் அணிந்திருக்கும் உடுப்புகள் அழுக்கான நிலையில் உள்ளதாகவும் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுவருகின்றன.

இதனை அடுத்தே உணவு கையாளும் பணியாள்கள் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இதற்கான நடவடிக்கையினை வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைத் தலைவர் வெ.அ. ஜோன்சன் மேற்கொண்டுள்ளார். (க-185)

# வேலணை, புங்குடுதீவு ஆஸ்பத்திரிகளின் குறைபாடுகள் நீங்குமா?

**வே**லணை கிராமிய வைத்தியசாலை மற்றும் புங்குடுதீவு மாவட்ட வைத்தியசாலை ஆகியவற்றில் நிலவும் சில குறைபாடுகளால் இந்த வைத்தியசாலைகளுக்கு வரும் நோயாளிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள்.

இந்த இரு வைத்தியசாலைகளிலும் அம்புலன்ஸ் வாகன வசதியின்மை, தொலைபேசி வசதியின்மை, 24 மணிநேர மின்சார வசதியின்மை, இரவு வேளைகளில் வைத்தியரின்மை, போதிய ஆளணி பற்றாக்குறை ஆகிய குறைபாடுகள் நிலவுகின்றன.

வேலணை கிராமிய வைத்தியசாலையைப் பொறுத்தவரையில், இங்கு வரும் அவசர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டிய நோயாளிகள், விபத்துக்களில் காயப்பட்டோர் மற்றும் பிரசவத் தாய்மார்கள் ஆகியோருக்கு ஆரம்ப சிகிச்சை அளித்து மேலதிக சிகிச்சை அளிக்கும் பொருட்டு அவர்களை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்ப வேண்டுமாயின், ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலையில் உள்ள அம்புலன்ஸ் வாகனத்தையே அழைக்க வேண்டும். அவ்வாறு உடன் அழைப்பதற்கு இந்த வைத்தியசாலையில் தொலைபேசி வசதியில்லை. பகல் வேளையாயின் தனியார் தொலைத்தொடர்பு நிலையத்தின் ஊடாக தகவல் அனுப்பி அம்புலன்ஸ் வாகனத்தினை அழைக்கலாம். இரவு வேளை எனின் இங்கு வைத்திய அதிகாரி இல்லாத நிலையில் தனியார் தொலைத்தொடர்பு நிலையங்களும் மூடப்பட்டுள்ள நிலையில் இங்கு வரும் அவசர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டிய நோயாளிகளை எவ்வாறு யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்க முடியும்.?

## செய்திமடல்

சில வேளைகளில் இங்கு வரும் பிரசவத் தாய்மார்கள் பிரசவ வேதனையால் துடிதுடிக்கும் போது அவர்களுக்கு இங்கு பிரசவம் பார்க்க முடியாத சூழ்நிலையில் அவர்களை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்புவதற்கு, ஊர்காவற்றுறையில நிற்கும் அம்புலன்ஸ் வாகனத்தையோ அல்லது தனியார் வாகனத்தையோ அழைக்க இந்த வைத்தியசாலையில் கடமை புரியும் ஊழியர்கள் வீதிகளில் அங்குமிங்குமாக ஓடித்திரிவதைக் காணக்கூடியதாக இருக்கும்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் பல தடவைகள் வேலணைப் பிரதேச சபை 'பிக்கப்' வாகனமே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. எனவே இவ்வாறான நிலையினைத் தவிர்க்கும் பொருட்டு இந்த வைத்தியசாலைக்கு ஓர் அம்புலன்ஸ் வாகனத்தையோ அல்லது தொலைபேசி வசதியினையோ வழங்குவதன் மூலம் வீணான மனித உயிரிழப்புகளையும், சிரமங்களையும் தவிர்க்க முடியும் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வைத்திய அதிகாரி தங்குவதற்கான விடுதி சேதமடைந்துள்ளதனாலேயே இதுவரை காலமும் வைத்தியர் இரவு வேளைகளில் இங்கு தங்குவதில்லை. ஆனால் தற்போது இந்த விடுதி புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளதால் இனிவரும் காலங்களில் இரவு வேளையில் வைத்தியர் இங்கு தங்குவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

### மின்சாரமும் சீரில்லை

மின்சாரமும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே கிடைக்கின்றது. அதாவது காலை 5மணியிலிருந்து காலை 6.30 வரையும் காலை 10.30 மணியிலிருந்து பகல் 2மணிவரையும், பின்னர் மாலை 6.30 மணியிலிருந்து இரவு 10 மணிவரையுமே மின்சாரம் கிடைக்கின்றது. சனி, ஞாயிறு மற்றும் பொது விடுமுறை நாள்களில் ஏனைய தினங்களைப் போல் காலை 10.30 மணியிலிருந்து பகல் 2 மணி வரை கிடைக்கும் மின்சாரம் கிடைப்பதில்லை. இவ்வாறு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மின்சாரம் கிடைப்பதனால் குளிர்சாதனப் பெட்டிகளில் வைத்து பழுதடையாதவாறு பாதுகாத்து உபயோகிக்கப்படும் ஏற்புத்தடை மருந்து வகைகளை உபயோகிக்க முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. இங்கு தாய், சேய் கிளினிக் நடைபெறும் நாள் அதாவது மாதத்தில் ஒரு நாள் மட்டுமே ஊர்காவற்றுறையிலிருந்து ஏற்புத்தடை மருந்துகள் கொண்டு வரப்பட்டு அவை உடனடியாக அன்று வரும் ஏற்புத் தாக்கத்திற்குள்ளான நோயாளிகளுக்கு ஊசி மூலம் ஏற்றப்படுகின்றது. ஏனைய தினங்களில் உடனடியாக ஏற்பு ஊசி போடவேண்டுமாயின் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை அல்லது ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலை ஆகியவற்றில் ஏதாவது ஒன்றிற்கே செல்ல வேண்டும். எனவே இந்த வைத்தியசாலைக்கு 24 மணிநேர மின்சாரம் அல்லது குளிர்சாதனப் பெட்டி இயங்கக் கூடிய அளவுக்கு மின்சாரத்தினைப் பிறப்பிக்கக்கூடிய மின்பிறப்பாக்கி. இதில் ஏதாவது ஒன்றினை வழங்குவதன் மூலம் அப்பகுதி மக்களின் வீண் சிரமங்களை தவிர்க்க முடியும்.

தற்போது வேலணை கிராமிய வைத்தியசாலையில் ஆண்கள் வார்டு கட்டடம் புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது. இப் புனரமைப்புப் பணிகள் நிறைவு பெற்றதும் இந்த வைத்தியசாலையினை முழுமையாக இயக்குவதற்கு தற்போது போதிய அளவு ஆளணி இல்லை. எனவே தேவையான ஆளணியினரை நியமித்து சிறப்பாக இந்த வைத்தியசாலையினை இயங்கவைப்பதன் மூலம வேலணைப் பகுதி வாழ் மக்கள் வைத்திய சேவையினைப் பெறுவதில் உள்ள சிரமங்களை ஓரளவுக்கு குறைக்க முடியும்.

### புங்குடுதீவு நிலைமை

புங்குடுதீவு மாவட்ட வைத்தியசாலையினை பொறுத்த வரையில் இங்கு நிரந்தர வைத்தியரே இல்லை.

**புங்குடுதீவு மாவட்ட வைத்தியசாலை ஆளணி விவரம் வருமாறு**

| பதவி | ஆளணி | தற்பொழுது கடமை புரிபவர் | வெற்றிடம் |
|---|---|---|---|
| * வைத்திய உத்தியோகத்தர் | 02 | – | 02 |
| * பல் வைத்தியர் | 01 | – | 01 |
| * பதிவு வைத்திய உத்தியோகத்தர் | 02 | – | 02 |
| * மருந்தாளர் | 02 | – | 02 |
| * ஆய்வு கூட தொழில்நுட்பவியலாளர் | 01 | – | 01 |
| * தாதியர் | 08 | – | 18 |
| * குடும்பநல சுகாதார சேவையாளர் | 03 | – | 33 |
| * சமையலாளி | 01 | – | 01 |
| * பரிசாரகர்கள் | 16 | – | 16 |
| * சாதாரண தொழிலாளி | 10 | – | 10 |
| * சுகாதாரத் தொழிலாளி | 18 | 02 | 16 |
| * காவலாளி | 02 | – | 02 |
| * சாரதி | 01 | – | 01 |

வேலணை கிராமிய வைத்தியசாலை பதிவு வைத்திய உத்தியோகத்தரே வாரத்தில் செவ்வாய், வெள்ளி ஆகிய இரு தினங்கள் மட்டும் புங்குடுதீவுக்குச் சென்று நோயாளிகளைப் பார்வையிட்டு வருகின்றார்.

புங்குடுதீவுப் பகுதியில் தற்போது சுமார் 800 குடும்பங்களைச் சேர்ந்த 2500 பேர் வாழ்கின்றனர். யாழ்நகரிலிருந்து சுமார் 15 கிலோமீற்றர் தூரத்திற்கு அப்பால் உள்ள இந்தப் பகுதி மக்களுக்கு ஏதாவது சுகவீனமாயின் யார் சிகிச்சை அளிப்பது?

புங்குடுதீவு வைத்தியசாலை மாவட்ட வைத்தியசாலை தரத்தில் இருந்தும் அந்தத் தரத்திற்குரிய எந்த விதமான செயற்பாடுகளும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. நிரந்தர வைத்திய உத்தியோகத்தரும் இல்லை; அவசர சிகிச்சைக்கு உட்படுத்தப் பட வேண்டிய நோயாளிகளை யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு அம்புலன்ஸ் வாகனமும் இல்லை. ஊர்காவற்றுறையில் உள்ள அம்புலன்ஸ் வாகத்தினை உடன் அழைப்பதற்கு தொலை பேசியும் இல்லாத நிலையில் இவ் வைத்தியசாலை உள்ளது. புங்குடுதீவுப் பகுதியில் தனியார் தொலைத் தொடர்பு நிலையங்கள் எதுவும் இல்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

புங்குடுதீவுப் பகுதிக்கான குடும்ப நல சுகாதார சேவையாளர் ஆளணி 3ஆக இருந்தும் · தற்பொழுது இந்த 3 ஆளணியும் வெற்றிடமாக இருப்பதனால் வேலணை குடும்பநல சுகாதார சேவையாளரே மாதத்தில் ஒரு நாள் அங்கு சென்று தாய், சேய நல சிகிச்சையினை மேற்கொள்கின்றார்.

இடம்பெயர்வு காரணமாக புங்குடுதீவில் மக்கள் தொகை குறைவாக உள்ளமையினால் புங்குடுதீவு வைத்தியசாலையை மாவட்ட வைத்தியசாலையாக இயங்க வைக்க முடியாதுள்ளதாக சுகாதார சேவைகள் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

புங்குடுதீவு மாவட்ட வைத்தியசாலையில் நிலவும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஆளணி வெற்றிடங்களை நிரப்பி, இதனை மாவட்ட வைத்தியசாலைத் தரத்தில் இயங்க வைப்பதன் மூலம் புங்குடுதீவுப் பகுதியில் கணிசமான மக்கள் மீளக்குடியமர்வார்கள். என்பது உறுதி.

**உதயன்**
**வேலணைச் செய்தியாளர்**

இவற்றினைப் போலவே மண்டைதீவு, அல்லைப்பிட்டி பகுதிகளில் உள்ள மக்கள் வைத்திய சேவையினைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இப்பகுதிகளில் வாரத்தில் இரு தினங்களாவது நடமாடும் வைத்திய சேவையினை நடைமுறைப்படுத்துவதின் மூலம் இந்தப் பகுதி வாழ் மக்களுக்கு ஓரளவு வைத்திய சேவையினையும், ஆலோசனைகளையும் வழங்கமுடியும். ☆

# சின்னஞ்சிறு விளம்பரம்

## காணி விற்பனைக்கு

கோப்பாய் தெற்கு, இராஜவீதிக்கு அண்மையில் 5பரப்புத் தோட்டக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: செ.கனக சபாபதி, குழுக்கண்டி வீதி, கோப் பாய் தெற்கு, கோப்பாய். (83782)

## மணமகள் தேவை

வெளிநாட்டில் பிரபல நிறுவனத் தில் ஆளணி முகாமையாளராகப் பணிபுரியும் கார்த்திகை 3ஆம் பாதம், 1969இல் பிறந்த மணமகனுக்கு படித்த, ஆங்கிலம் பேசக்கூடிய, அழ கான, பண்புள்ள மணப்பெண் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படும். ஜாதகம், அண்மையில் எடுத்த புகைப்படத் துடன் தொடர்புகொள்ளவும். விள. இல.1197, மே/பா உதயன்.(83591)

## T.V. விற்பனைக்கு

**SONY 2068, 2090, 2092 (20"), SONY 14"** (கலர்),**SONY 12"** (கறுப்பு வெள்ளை) **A/C D/C, SINGER 12"** (கறுப்பு வெள்ளை)**A/C D/C, GOLD-STAR** (கறுப்பு வெள்ளை) முதலி யன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: **N.T.** ராஜன், 140, கே.கே.எஸ். வீதி (சத்திரத்துச் சந்தி முனபாக), யாழ்ப் பாணம். (83584)

## திருத்துதல்

மூக்குக்கண்ணாடிகள் ஒட்டுதல், சகல கமரா வகைகளும் எலக்ரோனிக் பிளாஷ்கண், புகைப்படத்துறை சார்ந்த ஏனைய கருவிகள் அனைத்தும் திருத் திக் கொடுக்கப்படும். சு.நாராயணசாமி, 301, கஸ்தூரியார் வீதி (மேல் மாடி) கன்னாதிட்டிச் சந்திக்கு அருகில், யாழ்ப்பாணம். (83742)

## காணவில்லை

நன்கு வளர்ந்த வெள்ளை நிற பொமேரியன் நாய்க்குட்டியை 04.02.2001 இல் இருந்து காணவில்லை. இதைப பற்றி அறிந்தவர்கள் தயவு செய்து உடன் தொடர்பு கொள்ளவும். தேவ தாசன், 86, கோயில் வீதி, யாழ்ப்பா ணம். (83762)

## மணமகன் தேவை

யாழ்இந்து, கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த செவ்வாய்க்குற்றமற்ற 73ஆம் ஆண்டு பிறந்த, பூரநட்சத்திர, அழகிய பொது நிறமுடைய **B.Com** (ஆங்கில) பட்டதாரி மணமகளுக்கு உள்நாட்டில் அரச தொழில் புரியும் பட்டதாரி அல்லது அதற்குச் சமமான 29-36 வயதுக்குட்பட்ட தகுதியான மண மகன் தேவை. சீதனம் கொடுக்கப்ப டும். ஜாதகக் குறிப்பு, தொழில் விவ ரங்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். விளம்பரதாரர் **C/o A.P** சேனாதிராஜா, டச்றோட், அளவெட்டி. (83760)

## சோதிட நிலைய இடமாற்றம்

**22/1,** கச்சேரி வீதியில் இது வரை காலமும் இயங்கிவந்த வாணி சோதிடம், வாணி திருமாங்கல்ய சேவை என்பன 07.02.2001 முதல் இல.95, சத்திரத்துச் சந்தி, வைரவர் ஆலயத்திற்கு அருகில் இடம் மாற்றப படுகிறது. எமக்கு வேறு கிளைகள் இல்லை. (83775)

## பணிப்பெண் தேவை

கத்தோலிக்க சிறிய குடும்பம் ஒன்றுக்கு சமையல் செய்யக் கூடிய பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்பு: 19, புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூர் கிழக்கு. (83771)

## விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழி கள் விற்பனைக்கு உண்டு. மொத்த மாகவும் சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். அண்ணா, ஸ்ரேஷன் றோட், இணுவில். **(C/15146)**

## இசை வகுப்புக்கள்

"அபர்ணாலயா" இசை வகுப்புக் கள் நடனம், ஓகன், மிருதங்கம், வாய்ப் பாட்டு வகுப்புகள் தைப்பூசத் தினத் தன்று மாலை 3.00 மணிக்கு ஆரம்பம். விவரங்களுக்கு: கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம் முன்பாக. (83783)

எமது 'நியூ வீணாகானம்' இசை மன்றத்தின் சகல இசை வகுப்புக ளும் தைப்பூசத்தன்று ஆரம்பம். மேல திக விவரங்களுக்கு **16/2,** கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம், 60, வைமன வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (83524)

## தவறிவிட்டது

கைச்செயின் ஒன்று 02.02.2001 இல் கலட்டிச் சந்திக்கும் இராம நாதன் சந்திக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் கலட் டிச் சந்திக்கு அண்மையிலுள்ள வேல்ட் கொமினிகேசனில் தயவு செய்து ஒப் படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். **T.P.No 021-2188.** (83768)

கொக்குவில்கிழக்கு, கோணவளை ஒழுங்கையைச் சேர்ந்த தெய்வேந்தி ரம் புனிதவதி என்பவருடைய தே. அ.அட்டை (இல. 618364534V), வி. அ.அட்டை (இல.0902034830) என்பன 27.01.2001 அன்று மருதனார்மடத் திற்கும் கொக்குவிலுக்கும் இடை யில் பஸ்ஸில் தவறிவிட்டன. கண் டெடுத்தவர்கள் *லக்சனா தொடர்பு* நிலையம், 70, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். **T.P.No.2811** என்னும் முகவரியில் அல்லது மேற்படி முக வரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (83773)

**C.C.T.M** லேன், கொக்குவில் மேற்கு, கொக்குவில் எனும் முகவரி யைச் சேர்ந்த சந்திரலிங்கம் சந்திர காந்தன் என்பவருடைய தேசிய அ. அட்டை (இல.812852671V) இணுவில் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத் தவர்கள் தயவு செய்து இணுவில் இந்துக் கல்லூரியில் ஒப்படைத்துதவ வும். சன்மானம் வழங்கப்படும். (83787)

## தொலைபேசி தேவை

ரெலிக்கொம் தொலைபேசி இணைப்பு வைத்திருப்போர் உரிமை மாற்றம் செய்து விற்க விரும்பின் உடன் தொடர்பு கொள்க. விள.இல. 1200, மே/பா உதயன். (83789)

## ஜி.ஜி. நினைவு தினம் யாழ்.கூட்டணி அலுவலகத்தில்

யாழ்ப்பாணம்,பெப்,6

தமிழ் விடுதலைக் கூட்டணி யின் ஸ்தாபகத் தலைவர்களில் ஒரு வரும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் ஆரம்பகாலத் தலைவருமான ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் 24ஆவது நினைவு தினம் தமிழர் விடுதலைக் கூட்டணி யின் யாழ்.தலைமைச் செயலகத் தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 9ஆம் திகதி வெள் ளிக்கிழமை நினைவு தினம் அனுஷ் டிக்கப்படும். (க-5)

## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர்,
ஆஸ்துமா வாதநோய்கள்,
வலிப்புநோய், பீனிசம்,
தலையிடி, தலைகால்
அவியல்,
சரும நோய்கள்,
மாத விடாய்க் குத்து,
இரத்தப் போக்கு,
வெள்ளைக்சவு, கருவழிதல்,
மகப்பேறின்மை, குழந்தை
வைத்தியம், வீரியக் குறைவு,
மூலவியாதிகள், மூத்திர
ரோகங்களில் பிரபல மானவர்.
சகல வியாதி களையும்
குணப்படுத்துபவர்.

வேலணை
வைத்திய கலாநிதி
**சி.இராசரத்தினம்,**
121, 2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 2459
(83777)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



புனித பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவன்

**A.S.டிலோஜன்**

தற்பொழுது யாழ்.மரியன்னை பேராலயத்தின் பாடகர் குழாமின் இசை மீட்டுகின்றவராக இருந்து கொண்டிருக்கின்றார். அண்மை யில் வெளியிடப்பட்ட 'பாமலர்கள் சந்தானாள் பாதங்களில்' ஒலி நாடாவின் இசை இயக்கம் இவரே. இளம் வயதிலேயே முன்னேறி வரும் கலைஞனும், நண்பனுமாகிய **A.S.**டிலோஜனின பணி சிறக்க பாராட்டி நிற்கின்றோம்.

நாகினி குடும்பத்தினர்.

யாழ்ப்பாணம் (83779)

## 31ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம்
14
-
12
-
1920



மறைவு
07
-
01
-
2001

**அமரர் தாமோதரம்பிள்ளை சோமசுந்தரம்**


வாழ்க்கையில் வழிகாட்டியாய்
வாழ்வாங்கு வாழ வைத்த அப்பாவே!
நீங்கள் மறைந்தாலும் - எம்நெஞ்சில்
உங்கள் நினைவுகள் நீங்காது.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*இணுவில் தெற்கு,*
*இணுவில்.*
(C/15168)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY



### செல்வன் அ.ஜெ.ஜெனிபன்

காரைநகர் வீதி, நாவாந்துறை – யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த **அன்ரன் ஜெறாட் - சுகிர்தநாயகி** தம்பதிகளின் செல்வப் புதல்வன் **ஜெனிபன், வசந்தராசன் - இராசநாயகி** தம்பதிகளின் செல்வப்புதல்வன் **நிஜந்தனுடன்** தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (06-02-2001) செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

ஜெனிபனை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், அக்காமார், அண்ணாமார், மச்சாள்மார், மச்சான்மார், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குழந்தை இயேசுவின் அருள் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

கு.அ.ஜெறாட்
(அப்பா)
யாழ்.ப.நோ.கூ.சங்கம்

256 A, காரைநகர் வீதி,
நாவாந்துறை,
யாழ்ப்பாணம்.
(83788)

## கண்ணீர் அஞ்சலி



**அமரர் செகராசசிங்கம் குணசிங்கம்**

(முன்னாள் எழுதுவினைஞர், தொழில் திணைக்களம்)

வெள்ளைப் புறா ஒன்று
போனது கையில் வராமலே!

*ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

உன்பிரிவால் வாடும்:
திரு.திருமதி சிவச்சந்திரன்
திரு.திருமதி இரவீந்திரன் (பிரான்ஸ்)
திரு.திருமதி இரவிராஜன் (பிரான்ஸ்)

*'இரவி இல்லம்',*
*வதிரி.*
(83780)

## மரண அறிவித்தல்

### செகராசசிங்கம் குணசிங்கம்

**(சின்னராசா)**

(முன்னாள் எழுதுவினைஞர், தொழில் திணைக்களம்)

வதிரியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட செகராசசிங்கம் குணசிங்கம் 31.01.2001 அன்று இந்தியாவில் காலமானார்.

அன்னார் செகராசசிங்கம் - சிவகாமி (முன்னாள் உரிமையாளர், யாழ்ப்பாணம் ஸ்ரோர்ஸ், பதுளை) தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும், தனலக்குமியின் அன்புக் கணவரும், சிவலோகநாதன் (கனடா), சிவ பாலசிங்கம் (கனடா), திருமதிகள் ரவிச்சந்திரா, தவராசா (கனடா), ஜெயச்சந்திரா, சிவராசா, சிவச்சந்திரா எலிசன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.02.2001) புதன்கிழமை இந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி. ஜெயச்சந்திரா சிவராஜா
(சகோதரி)

*'சந்திரோதயம்'*
*வதிரி.*
(83778)

### சீனாவின் எதிர்ப்பின் மத்தியிலும்

# கர்மபாலாமாவுக்கு இந்தியா அகதி அந்தஸ்து வழங்கியது

புதுடில்லி, பெப். 6

சீனாவின் எதிர்ப்பையும் மீறி திபெத்திய ஆன்மீகக்குரு 17வதுகர்மபாலாமாவுக்கு இந்திய அரசு அகதி அந்தஸ்து வழங்கியுள்ளது.

14 வயதான கர்மபாலாமா தற்போது தங்கியுள்ள பௌத்த மடாலயத்தில் தொடர்ந்து தங்கவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசு கர்மாபாலாமாவுக்கு அகதி அந்தஸ்து வழங்கியுள்ளதால், சீனாவுடனான அதன் உறவில்விரிசல் ஏற்படாது என்று நம்புவதாக இந்திய உள்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சீனாவின் கட்டுப்பாட்டில் இருந்து திபெத்தை விடுவிக்க முயற்சித்து வரும் திபெத்திய மக்களின் ஆன்மீக குருவான தலாய்லாமா பல ஆண்டுகளின் முன்னரே இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ளார்.

இதனால் 14 வயதான கர்மபாலாமாவை தனது கட்டுப்பாட்டில் உள்ள திபெத்தில் ஆன்மீக குருவாக சீனா உருவாக்கியது.

ஆனால் கர்மபாலாமா திபெத்தில் இருந்து தப்பி கால்நடையாகவே இமயமலையைக் கடந்து இந்தியாவுக்குள் தஞ்சம் அடைந்தார். தற்போதுஇவருக்கே மத்திய அரசு அகதி அந்தஸ்து வழங்கியுள்ளது.

திபெத் மக்களிடம் செல்வாக்கைப் பெற்றுள்ள இருலாமாக்களும் தற்போது இந்தியாவிடம் தஞ்சமடைந்துள்ளனர்.

திபெத் மீதான சீன ஆக்கிரமிப்பை அகற்றக்கோரும்தலாய்லாமாவின்குரலுக்கு கர்மபாலாமாவின் ஆதரவு சேரும் என சீனா கவலை அடைவதாகக் கூறப்படுகிறது.

சமீபகாலமாக இந்திய சீனா உறவுகள் சீரடைந்து வந்தன.

இப்போது சீனாவின் ஆட்சேபனையை மீறி கர்மபாலாமாவுக்கு இந்தியா அகதி அந்தஸ்து வழங்கியுள்ளதால் இரு நாட்டு உறவுகளிலும் விரிசல்கள் ஏற்படக் கூடும் என்று கருதப்படுகின்றது. [ஒ]

### இஸ்ரேலுடன் தொடர்பு வைத்திருந்த

# லெபனானியர் 33 பேருக்கு சிறைத் தண்டனை விதிப்பு

பெய்ரூட், பெப். 6

இஸ்ரேலுக்கு உடந்தையாகச் செயற்பட்டார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்ட தனது நாட்டுக் குடிமக்கள் 33 பேருக்கு லெபனான் நீதிமன்றம் ஒன்று சிறைத்தண்டனை வழங்கி உள்ளது.

அவரவரது குற்றங்களுக்கேற்ப மூன்று வாரம் முதல் மூன்றாண்டுகளுக்கு இந்தச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இஸ்ரேல் அரசுடனும்படைகளுடனும் நேரடியாகவோ மறைமுகமாகவோ தொடர்புகளை வைத்திருந்தார்கள் என்று அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டதை அடுத்தே அவர்களுக்கு இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

18 ஆண்டுகளுக்கு முன்னர் தெற்கு லெபனானை இஸ்ரேல் ஆக்கிரமித்தது. இதனை அடுத்து இஸ்ரேல் அரசுடன் அல்லது படைகளுடன் தொடர்பு வைத்திருப்பது சட்டவிரோதம் என்று லெபனான் அரசு தடைவிதித்தது.

தெற்கு லெபனான் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பில் இருந்தபோது அதன் ஆதரவுடன் தென் லெபனானியப் படை என்ற அமைப்பு அங்கு செயற்பட்டு வந்தது

அதில் பணியாற்றிய உறுப்பினர்கள் மற்றும் அந்த அமைப்புக்கு உதவி புரிந்தவர்கள் ஆகியோருக்கே தற்போது சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தெற்கு லெபனானில் இருந்து கடந்த ஆண்டே இஸ்ரேலியப் படைகள் வாபஸ் பெறப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

# ஒருவார காலத்துக்குள் குஜராத்தில 374 நிலநடுக்கங்கள்

புஜ், பெப், 6

குஜராத்தின் புஜ் மாவட்டத்தில் கடந்த மாதம் 26 ஆம் திகதி பாரியபூமியதிர்ச்சி தாக்கியதிலிருந்து இதுவரை 374 நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த அதிர்வுகள் 5 ரிச்டேருக்கு உட்பட்ட அளவுகளைக் கொண்டிருந்தன.

சிறிய அளவு நில நடுக்கங்கள் அப் பிரதேசத்தில் மேலும் உணரப்பட்டு வருகின்றன.

குஜராத்தில் பூமியதிர்ச்சியால் 135 ஆயிரம் கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

75 ஆயிரம் வீடுகள் முற்றாகத் தரைமட்டமாகியதாகவும், ஒரு லட்சத்து 50 ஆயிரம் வீடுகள் சேதமடைந்ததாகவும் புனரமைப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள 949 கிராமங்களுக்கு நிவாரண உதவிகள் இதுவரை சென்றடையவில்லை என்று முறைப்பாடுகள் எழுந்துள்ளன. [ஒ]

## வாஹிட்டுக்கு அமைச்சரவை ஆதரவு

ஜகார்த்தா, பெப். 6

இந்தோனேசிய ஜனாதிபதி அப்துல் ரஹ்மான் வாஹிட்டுக்கு அமைச்சரவையும் முப்படைகளின் தலைவர்களும் ஆதரவளிப்பதாக உறுதியளித்துள்ளனர்.

வாஹிட் மீது சுமத்தப்பட்ட லஞ்சக் குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரங்கள் இருப்பதாக நாடாளுமன்ற விசாரணைக் குழு அறிவித்த சில நாள்களின் பின்னர் மேற்படி ஆதரவு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# இஸ்ரேல் அதிபர் தேர்தல்; வாக்களிப்பு இன்று

ஜெருசலேம், பெப். 6

இஸ்ரேலிய அதிபர் தேர்தல் வாக்களிப்பு இன்று நடைபெற உள்ளது.

இந்தத் தேர்தலில் லிகுட் கட்சி வேட்பாளர் ஷரோன் வெற்றி பெறுவார் என தேர்தலுக்கு முன்னான கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

ஷரோன் வெற்றி பெற்றால் காஸா மற்றும் மேற்குக் கரைப் பிரதேசங்கள் வன்முறைகள் அதிகரிக்கும் என்று முன்னாள் அதிபர் பராக் எச்சரித்துள்ளார்.

இஸ்ரேலிய வாக்காளர்களில் வெற்றி பெறுபவரைத் தீர்மானிக்கக் கூடிய நிலையில் உள்ள இஸ்ரேல் அரேபியர்கள் 12.3 சத வீதத்தினரின் பெரும்பாலானோர் தாம் இந்தத் தேர்தலில் வாக்களிக்கப் போவதில்லை என்று தெரிவித்துள்ளனர்.

1999 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் இவர்கள் எகுட் பராக்குக்கு ஆதரவளித்ததனாலேயே அவர் வெற்றி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம—7)

## காந்தியின் இல்லமும் சேதம்

புஜ், பெப் 6

குஜராத்தைத் தாக்கிய பூகம்பம் காரணமாக போர்பந்தரில் உள்ள மகாத்மா காந்தி பிறந்த இல்லத்தில் விரிசல்கள் ஏற்பட்டுள்ளன.

அத்துடன் காந்தியின் மனைவியான கஸ்தூரிபாயின் பூர்விக இல்லத்திலும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

இரு இல்லங்களிலும் ஏற்பட்டுள்ள சேதங்களை புனரமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. (ஒ)

# இந்தோனேசிய அதிபருக்கு முஸ்லிம் அமைப்பு ஆதரவு

ஜகார்த்தா, பெப், 6

நாடாளுமன்றத்தால் ஊழல் குற்றச்சாட்டுக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் இந்தோனேசிய அதிபர் அப்துல் ரஹ்மான் வாஹிட்டுக்கு நாட்டின் மிகப் பெரும் முஸ்லிம் அமைப்பான 'நாத்வாஜ்உல் உலமா' என்ற அமைப்பு ஆதரவு தெரிவித்துள்ளதுடன் அதிபர் தொடர்ந்தும் பதவியில் இருக்கவேண்டும் என்று வலியுறுத்தி உள்ளது.

4 கோடிப் பேருக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டுள்ள அந்த அமைப்பு அதிபருக்கு எதிராக நாடாளுமன்றம் எடுக்க இருக்கும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கிழக்கு ஜாவாவில் தொடர் ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்தி வருகின்றது.

அதிபர் மீது நாடாளுமன்றம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமானால் தனது உறுப்பினர்களைக் கட்டுப்படுத்த முடியாமல் போகும் என்றும் அந்த அமைப்பு எச்சரித்துள்ளது.

இதற்கிடையில் -

தன்மீதான குற்றச்சாட்டுக்களை மறுத்துவரும் அதிபர் வாஹிட் தனக்கு நாட்டின் துணை அதிபர் மேகவதி சுஹார்னோ புத்திரியின் ஆதரவு இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (ம-7)

### குஜராத் மாநிலத்தில்

# இடிபாடுகள் மத்தியில் இருந்து காயங்களின்றி இளைஞன் மீட்பு!

புதுடில்லி, பெப். 6

குஜராத் மாநிலத்தை அண்மையில் நிலநடுக்கம் தாக்கியதால் ஏற்பட்ட இடிபாடுகளுக்குள் சிக்கிக்கொண்ட 17 வயது இளைஞர் ஒருவர் எந்தவிதக் காயங்களும் இன்றி மீட்கப்பட்டுள்ளார்.

நிலநடுக்கம் ஏற்பட்ட போது பாரிய குண்டுவெடிப்பு ஒன்று நிகழ்ந்ததாகத் தான் கருதியதாகவும் —

இதனால் அச்சமடைந்து அருகே இருந்த ஒரு மரத்தின் அடியில் ஒதுங்கிக்கொண்டதாகவும்—

### ஓசை அரங்கில்

ஆனால் ஒரு சில நிமிடங்களில் தான் நின்றிருந்த மரத்துடன் சேர்ந்து மரத்தருகே இருந்த பெரிய கிணற்றுக்குள் வீழ்ந்து விட்டதாகவும்—

அவர் தெரிவித்துள்ளார்.

மீட்புப் பணியாளர்கள் அவரை மீட்டபோது அவரது உடலில் காயங்கள் எதுவுமின்றி அவர் ஆரோக்கியமாக இருந்ததாகத் தெரிவித்துள்ளனர். (ம-7)

## தலைவர்கள் அனுதாபம்

புதுடில்லி, பெப். 6

குஜராத் நிலநடுக்கம் குறித்து இஸ்ரேல் காபந்துப் பிரதமர் எகுட்பராக் மற்றும் தென்னாபிரிக்க முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா ஆகியோர் அனுதாபம் தெரிவித்துள்ளனர்.

இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அவர்கள் தமது அனுதாபத்தை நேரில் கூறினர். (ம-7)

## குஜராத்தில் பலியானோருக்காக பிரார்த்தனை

குஜராத்தில் நிலநடுக்கத்தால் உயிரிழந்த சுமார் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரின் ஆத்மாக்கள் சாந்தி அடைவதற்கான மிகப்பெரிய பாரம்பரிய இந்துசமய வழிபாடுகள் நாளை புதன்கிழமை நடைபெற உள்ளன.

அதில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொள்ள உள்ளனர். 60க்கும் மேற்பட்ட இந்துசமயக்குருக்கள் சேர்ந்து வேள்வி நடத்துவர்.

நிலநடுக்கம் ஏற்பட்ட 13 ஆவது நாளில் அந்தப் பிரார்த்தனை நடத்தப்பட உள்ளது.

# இந்திய, நேபாளப் பகுதிகளில் பூமியதிர்ச்சி ஏற்படும் அபாயம்!

## இமயமலையைத் தாக்குமாம்

இந்திய, நேபாளப் பகுதிகளில் பாரிய பூமியதிர்ச்சி ஏற்படும் என்று அமெரிக்கப் புவியியல் விஞ்ஞானி எச்சரித்துள்ளார்.

கொலரோடா பல்கலைக் கழகப் பேராசிரியரான ராப்டர் பில்ஹாம் என்பவரே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

பூகம்பம் பெரும்பாலும் இமயமலைப் பகுதியிலேயே நிகழும் என்று அவர் கூறினார்.

உலகின் தரை அமைப்பில் பிரிக்கப்பட்டுள்ள 12 தகடுகளில் ஒன்றான இந்தியத் தகடு ஆஸ்திரேலியா கண்டத்தை நெருங்கிக் கொண்டிருப்பதாகவும்—

இதனால் ஏற்படும் அழுத்தமே குறிப்பிட்ட பூமியதிர்ச்சி ஏற்படுவதற்கு காரணமாக இருக்கும் என்றும்—

பில் ஹாம் விளக்கமளித்துள்ளார்.

கடந்த 15 ஆண்டுகளாக தொலை உணர்வுச் செயற்கைக்கோள், புகைப்படங்கள் மூலம் ஆய்வுகளை நடத்தி பூகம்பம் ஏற்படப்போவதைக் கண்டு பிடித்ததாகவும் அவர் கூறியுள்ளார். (ஒ)

## இசைக்கருவிகளை மீட்டுவதில் சாதனை

சிங்கப்பூரைச் சேர்ந்த 3 இளைஞர்கள் அதிக நேரம் இசைக்கருவிகளை மீட்டுவதில் சாதனை படைத்துள்ளனர்.

செல்வபாண்டியன், பாஸ்கரன், நவாஸ் ஆகிய மூவரும் கடந்த வெள்ளிக்கிழமை முதல் 25 மணி நேரம் தொடர்ந்து இசைக்கருவிகளை மீட்டிச் சாதனை புரிந்துள்ளனர்.

இதற்கு முன்னர் இசைக்கருவிகளை மீட்டிச் சாதனை படைக்க எவரும் முயன்றதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# கணவனைக் கொலை செய்த பெண்ணுக்கு மரணதண்டனை

சொத்துக்கு ஆசைப்பட்டு அடியாள்களை வைத்து தனது கணவனைக்கொலை செய்த முஸ்லிம் பெண் ஒருவருக்கு சிங்கப்பூர் உயர் நீதிமன்றம் மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

ஜுலையா பேகம் என்ற இந்தப் பெண் தனது கணவரான சப்இன்ஸ்பெக்டர் டி. மணியம் என்பவரைக் கொலை செய்ததாகக்குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

முதலில் இந்திய முஸ்லிம் வர்த்தகர் ஒருவரைத் திருமணம்செய்துகொண்டபேகம் பின்னர் அவரை விவாகரத்து செய்துவிட்டு சப்இன்ஸ்பெக்டரான டி. மணியத்தை திருமணம் செய்து கொண்டார்.

கணவருக்குச் சொந்தமான 6 லட்சத்து 60 ஆயிரம் டொலர் பெறுமதியான வீட்டைத்தன்வசப்படுத்தும்நோக்கத்துடன் அவரைக் கொலை செய்ததாகக் கூறப்படுகிறது

இவருக்கு விதிக்கப்பட்டுள்ள மரண தண்டனை நிறைவேற்றப்பட்டால் சிங்கப்பூரில் மரண தண்டனைபெறும் முதலாவது முஸ்லிம் பெண்ணாக அவர் இருப்பார் என்று அவர் சார்பாக வாதாடிய சட்டத்தரணி தெரிவித்தார். (ம-7)

## பெயர் மாற்றம்

தவசிகுளம், மிருசுவிலைச் சேர்ந்த கிருஷ்ணன் ஜயா ஆகிய நான் இன்று (06-02-2001) செவ்வாய்க்கிழமையில் இருந்து எனது பெயரினை

**கிருஷ்ணன் சுரேஷ்**

என மாற்றியமைக்கின்றேன் என்பதை யாவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கி. சுரேஷ்

தவசிகுளம், மிருசுவில். (86807)

## நன்றி தெரிவிப்பு

31-1-2001 உதயன் பத்திரிகையில் 8 ஆம் பக்கத்தில் பிரசுரமான விளம்பரம் தொடர்பாக, அதில் கூறப்பட்ட கைச்சங்கிலி எங்களுடையது என்று அடையாளம் காட்டி, அதற்கு உரிய பத்திரங்களால் நிரூபிக்கப்பட்டு,

**திரு. ந. ராகுலன்**

இல. 11, 6 ஆம் ஒழுங்கை, பலாலி வீதி, கந்தர்மடம்;

என்பவரிடமிருந்து பெற்றுக் கொண்டேன். திரு ராகுலனுக்கும் அவரின் குடும்பத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(83816) வ. சிவஞானம்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். மாநகர ஆணையாளராக இருந்து வடக்கு—கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ள எமது பிரதேச சபைப் பகுதியைச் சேர்ந்த

**உயர்திரு. வே. பொ. பாலசிங்கம்**

அவர்களை மேலும் பதவி உயர்வுபெற்று பல்லாண்டு வாழ பாராட்டி வாழ்த்துகின்றோம்.

தலைவர், செயலாளர்.
உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

(சி/15178)

## கண்ணீர் அஞ்சலி

புதுவீதி, ஆறுகால்மடம்
ஆனைக்கோட்டையைச் சேர்ந்தவரும்
லட்சுமி கொமினிக்கேசன் உரிமையாளருமான

**தயானந்தன் வாகீசன்**

03-02-2001 (சனிக்கிழமை) அகால மரணமானார். அன்னாரின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அருள்மிகு நாவலடி
ஞான வைரவர் தேவஸ்தானம்

மயிலு வீதி, ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை. (83814)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 19 — 09 — 1944



மறைவு: 04 — 02 — 2000

**அமரர் சின்னப்பு மகாலிங்கம்**

(யாழ். போதனா வைத்தியசாலை உத்தியோகத்தர்)

திதி: 06 - 02 - 2001

ஆண்டொன்று சென்றாலும்
உங்கள் ஆதரவு இன்றி வாடுகின்றோம்!
காலங்கள் தான் சென்றாலும்
உங்கள் நினைவு எம் கண்களைக் கண்ணீரால் கரைக்கின்றன!

எம் கண்கள் இமைப்பதற்குள் இறைவன்
உமை தன் பாதம் அழைத்ததன் காரணமேனோ?

உம் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரிகள்,
மாமி, மச்சான்மார், மச்சாள்மார்.

தற்போதைய முகவரி: அளவெட்டி.
புதிய வீதி, ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை. (83812)

## சமய சந்நிதிகளில்

ஏழாலை தெற்கு வசந்தபுரம் வசந்த நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் தேர்த்திருவிழா நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கும், தீர்த்தோற்சவம் மறுநாள் வியாழக்கிழமை காலை 10 மணிக்கும் நடைபெறவுள்ளன. (க-10)

★ ★ ★

தைபூசத் திருநாளை முன்னிட்டு நல்லூர் அறுபத்து மூன்று நாயனார் குருபூசை மடத்தில் நாளை புதன்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் விஷேட கூட்டுப் பிரார்த்தனையும் பகல் 12.00 மணிக்கு மகேஸ்வர பூசையும் நடைபெறும். (ம)

★ ★ ★

அனலைதீவு பூரணை புட்கலை சமேத ஹரிகரபுத்திர ஐயனார் ஆலய இராஜகோபுர அடித்தள அத்திவாரம் இடும் விழா நாளை புதன்கிழமை தைப்பூச தினத்தன்று காலை 8-35 முதல் 10-05 வரையுள்ள சுபநேரத்தில் நடைபெறும். (3)

★ ★ ★

சண்டிலிப்பாய், சீரணி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானத்தில் வள்ளி தெய்வயானை சமேத ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி உருநாடு திருவுருவாக்கல் விழா நாளை புதன்கிழமை தைப்பூச தினத்தில் நடைபெறும். (க-15)

★ ★ ★

தென்புலோலியூர் ஒல்லை வீரபத்திரர் ஆலய ஏககுண்டபக்ஷ நூதன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை நடைபெறும்.

அல்லையம்பதி பிரதிஷ்டா குரு சிவப்பிரம்மஸ்ரீ ராம கெங்காதரக் குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகம் இடம்பெறும். (க-109)

★ ★ ★

யாழ். வண்ணார்பண்ணை கன்னாதிட்டி அருள்மிகு காளியம்பாள் கோவில் புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை தைப்பூசத் திருநாளன்று காலை 6 மணி முதல் 8 மணி வரையிலான சுபவேளையில் நடைபெறும்.

கும்பாபிஷேகக் கிரியைகள் நேற்று ஆரம்பமாகின. இன்று செவ்வாய்க்கிழமை எண்ணெய்க்காப்பு இடம்பெறும். (க-173)

## சிறுவர் உரிமை கருத்தரங்கு

சிறுவர் உரிமைகள் தொடர்பான கருத்தரங்கு ஒன்று காரைநகர் சுவாமி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் நாளை புதன்கிழமை காலை 10-00 மணி தொடக்கம் நடைபெற உள்ளது.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகத்தின் வழிகாட்டலில் சிறுவர் உரிமைகள் குழு மாவட்டப் பயிற்சியாளர்களினால் நடத்தப்படும் இந்தக் கருத்தரங்கில் காரைநகர்ப்பகுதி கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள சிறுவர் உரிமைகள் கண்காணிப்புக்குழு பிரதிநிதிகள், முன்பள்ளி ஆசிரியைகள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-73)

## மீளாய்வு

நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கந்தர்மடம் வடமேற்கு ஜே/102 கிராம சேவையாளர் பிரிவில் 'உ' பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

'உ' பங்கீட்டு அட்டை உள்ளோர் தங்கள் பங்கீட்டு அட்டைகளைமீளாய்வுசெய்து புதிய அட்டைகளைப்பெற்றுக் கொள்ளுமாறு கந்தர்மடம் வடமேற்கு கிராமசேவையாளர் வ. சந்திரசேகரம் அறிவித்துள்ளார். (ம-73)

## வாழ்த்துச் செய்தி

**திருகோணமலை**

**ஜெகன்மாதா ஸ்ரீ பத்திரகாளி அம்பாள்**

தேவஸ்தான புனராவர்த்தன
சம்புரோக்ஷண நவகுண்டபக்ஷ
நூதன ஆலய சப்த தள

**இராஜகோபுர கும்பாபிஷேகம்**

ஈழத் திருநாட்டின் திருகோணமலைப் பதிகம் நாயன்மார்களால் பாடப்பட்டது. சைவத் தமிழ் புலவர்கள் பாடிய பக்தி இலக்கியங்கள் அனேகம் உள்ளன. இலங்கேஸ்வரனாகிய இராவணன் நாரத முனிவரோடு இணைந்து இசை வளர்த்த திருத்தலம். சரித்திரப் பிரசித்தி பெற்ற தலம். வரலாற்றுச் சான்றுகள் மலிந்த சிவபூமி. இந்தத் திருத்தலத்தில் ஜெகன் மாதாவாகிய ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் எழுந்தருளி அருள் பாலிக்கும்போது, அடியார்கள் படும் துயரங்கள் அனைத்தும் நீங்கி, ஆனந்தம், அமைதி, சாந்தம் கிடைக்கும்.

இந்த ஆலயத்தைப் புனராவர்த்தனம் செய்துசப்த தள இராஜகோபுர மகா கும்பாபிஷேகக் கிரியைகளை சிவாச்சாரியர்கள்; தைப்பூசத் (07-02-2001) திருநாளாகிய சுபதினத்தில் நடத்தும் செய்தி இனிமையானது. ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் திருக்குடமுழுக்கு வைபவமும் ஏனைய வைபவங்களும் இனிதே நடைபெற்று அதன்மூலம் ஈழமக்களின் துன்பங்கள், துயரங்கள் அனைத்தும் நீங்கி அனைவரும் தெய்வீக விழிப்புணர்ச்சி பெற்று பக்தி, அன்பு, கருணை, ஜீவகாருண்யம், தயை, அகத் தூய்மை, ஆனந்தம் முதலிய தெய்வீக சிந்தனைகள் மலரவும், பரிபூரண வாழ்வு வாழவும் எல்லாம் வல்ல அன்னை ஜெகன்மாதாவாகிய ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் பாதாரவிந்தங்களை ஆராதனை செய்வோமாக.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

ந. திரிலோகநாதன்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தலைவரும்,
வலிகாமம் மேற்கு இந்து ஆலயங்களின் மகாசபையின் போசகரும்,
வட்டுக்கோட்டைத் தொகுதி ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அமைப்பாளரும்.

(சி/15177)

## கண்ணீர் அஞ்சலி

எமது சபையின் சக ஊழியர்
திரு. ஐ. செல்வராசா அவர்களின்
அன்புத் தந்தை

**அமரர் சின்னக்குட்டி ஐயாக்குட்டி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச்சங்கம்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை, மல்லாகம்.

(சி/15175)

## மரண அறிவித்தல்

**தயானந்தன் வாகீசன்**

(திருநெல்வேலி வெற்றிலைக் கடை,
லக்ஷ்மி கொம்னிக்கேசன் உரிமையாளர்)

புது வீதி ஆறுகால்மடம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தயானந்தன் வாகீசன் 03-02-2001 சனிக்கிழமை அன்று அகால மரணமானார்.

அன்னார் தயானந்தன் — மகேஸ்வரியின் அன்பு மகனும், தயாகரன் (லண்டன்), வாசகி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கிருஷ்ணகுமாரின் (லண்டன்) மைத்துனரும் காலஞ்சென்ற துரைராசா (திரவியம்) மற்றும் கண்மணி ராசரட்ணம், ராசம்மா ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06-02-2001) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் வீட்டில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
ந. செல்வரத்தினம்
(சித்தப்பா)

புது வீதி,
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை. (83820)

# காங்கேசன்துறையில் உள்ள ஏழு கைதிகளின் விவரம்

யாழ்ப்பாணம்,பெப்.6

படையினரால் கைது செய்யப் பட்ட 7 பேர் காங்கேசன்துறை கைதிகள் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக யாழ்.பொலீஸாரினால் மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் ஏழு பேரின் பெயர் விவரங்கள் வருமாறு:-

- நல்லதம்பி கேதீஸ்வரன் (புதுகுடியிருப்பு)
- கந்தசாமி யோகேஸ்வரன் (பூநகரி)
- பாலசுந்தரம் கோபாலகிருஷ்ணன் (இராமநாத புரம், கிளிநொச்சி)
- இரத்தினம் ராஜா (இரணை மடு, கிளிநொச்சி)
- கிருஷ்ணபிள்ளை ஆனந்தரூபன் (இராமநாதபுரம் கிளிநொச்சி)
- தம்பையா தயாபரன் (இராம நாதபுரம், கிளிநொச்சி)
- இரத்தினம் ராஜகிளி போகலன் தங்கராஜ்(கிளிநொச்சி)

இதே வேளை -

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலக அதிகாரி என்.ஜீவேஸ்வரா இன்று செவ்வாய்க் கிழமை காங்கேசன்துறை கைதிகள் தடுப்பு முகாமுக்குச் சென்று அங்குள்ள கைதிகளைப் பார்வையிட வுள்ளார். (ஐ-10)


## மகோகனிமரம் விற்பனைக்கு உண்டு

பழைமை வாய்ந்த நல்ல நிலையில் உள்ள மகோகனி மரம் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:-

புனித சவேரியார் ஆலயப் பணிமனை,
குளமங்கால்,
மல்லாகம்.

(83801)



## விற்பனையாகின்றன

2001 ஆம் ஆண்டுக்கான வண்ணக் கலண்டர்கள்

- வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் தரம் 11 - அ.சிவனேசராஜா
- வணிகக் கல்வியும் கணக்கீடும் தரம் 11 - இ.ரட்ணம்
- கல்வி உளவியல் அடிப்படைகள் - யோ.பெனடிற்பாலன்
- முகாமைத்துவம் - க.தேவராஜா
  தலைவர், வணிகத்துறை யாழ்.பல்கலைக்கழகம
- தமிழ் இலக்கிய வரலாறு - வி.செல்வநாயகம் M.A.

ஞ.வியின் புதிய வெளியீடுகள்

ஸ்ரீலங்கா புத்தகசாலை,
234, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 2573

(83810)



யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம்
தூய விஞ்ஞானப் பிரிவு
ஆய்வு முறையியல் கருத்தரங்கு
ஆறாம் நாள் நிகழ்வு

நாளை (07.02.2001) புதன்கிழமை இடம்பெற இருந்த பேராசிரியர் சண்முகதாஸின் உரை 08.02.2001 வியாழக் கிழமை 3.30 மணிக்கு இடம்பெறும்.

செயலாளர்,
யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம்,
தூய விஞ்ஞானப் பிரிவு.

(C/15165)



## வாடகைக் கதிரைகள் விலை குறைப்பு

எமது வாடிக்கையாளரின் நன்மை கருதி 15.02.2001 முதல் எம்மால் விநியோகிக்கப்படும் இரும்பு - பிளாஸ்ரிக் கதிரைகள் கீழ் காணும் விலைகளில் வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

இரும்பு – ரூபா 1
பிளாஸ்ரிக் – ரூபா 5

"சிவாஸ்"
கி.சிவநாயகம்.
மூளாய் - சுழிபுரம்.

(83800)



## இலவச கணனிப்பயிற்சித் திட்டம்

324, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்

ஐ.நா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச திணைக்களங்களை கணனிமயப்படுத்துவதில் பெரும் பங்காற்றிய எமது நிறுவனத்தினர் 2001ஆம் ஆண்டில் இலவச பயிற்சித்திட்டம் ஒன்றை முன் வைத்துள்ளார்கள்.

பிரிவு III ஆரம்பம்:-நாளை 07.02.2K +1 காலை 9.30

பதிவுகளை மேற்கொண்டவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.

(C/15169)


## குடும்பஸ்தர் தாக்கப்பட்டார்

யாழ்ப்பாணம்,பெப்.6

யாழ்.நாயன்மார்க்கட்டு பகுதியில் இனந்தெரியாத நபர்களால் குடும்பஸ்தர் ஒருவர் மின் கம்பத்தில் கட்டி வைத்து கடுமையாகத் தாக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் ஆறு பிள்ளைகளின் தந்தையான மார்க்கண்டு திருச்செல்வம் (வயது-30) நாயன்மார்க் கட்டு வீதி, நல்லூர்) என்பவரே தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-6)

## மாணவர்கள் நால்வர் காயம்

யாழ்ப்பாணம்,பெப்.6

பாடசாலைகளில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளின் போது காயமடைந்த நான்கு மாணவர்கள் நேற்று யாழ். போதனா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

- ஜெயபரன் ஜெயபிரதாப் - தரம் 7 சங்குவேலி தமிழ் கந்தையா வித்தியாசாலை.
- செல்வராஜா சபேசன்- தரம் 9 சதாபொன்ஸ் கல்வி நிலைய மாணவன்.
- எஸ்.யூடிற் பமில் - தரம் 10- இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மட மகா வித்தியாலயம்.
- துரைராஜா அஜித்தா - தரம்1 - சித்தன்கேணி திருநாவுக்கரசு வித்தியாலயம். (ஐ-6-ரி)

## பொலீஸார் சிரமதானம்

காரைநகர்,பெப்.6

ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலை வளாகம் ஊர்காவற்றுறை பொலீஸாரினால் சிரமதானப் பணி மூலம் துப்புரவு செய்யப்பட்டுளளது.

சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை ஊர்காவற்றுறைப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி சரத்சந்திரவின் ஏற்பாட்டில் பொலீஸ் நிலைய சார்ஜன்ட் தர்மதாச தலைமையில் நடைபெற்ற இந்த சிரமதானப் பணியில் 40 க்கும் மேற்பட்ட பொலீஸார் ஈடுபட்டனர். (ஐ-73)

## தரமற்ற அரிசி திருப்பி அனுப்பப்பட்டது

தென்மராட்சி,பெப்.6

யாழ்.அரச களஞ்சியத்திலிருந்து சாவகச்சேரி கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்ட நிவாரணத்திற்கான 20 ஆயிரம் கிலோ அரிசி தரமற்றதென சுகாதாரப்பகுதியினர் தெரிவித்ததையடுத்து திருப்பி அனுப்பப்பட்டது.

ஜனவரி மாத நிவாரணத்திற்கென வழங்கப்பட்ட அரிசியினை சங்கத்தின் நெல்லியடி மொத்தக் களஞ்சியத்தில் வைத்து பருத்தித்துறை சுகாதாரப் பகுதியினர் பரிசோதனை செய்த போது அரிசி பழுதடைந்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. (ஐ-117)

## மாதாந்த உதவிப் பணம்

தென்மராட்சி,பெப்.6

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கான ஜனவரி, பெப்ரவரி மாதங்களுக்குரிய கொடுப்பனவுகள் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி, கொடிகாமம் அஞ்சல் அலுவலகங்கள்,விடத்தற்பளை, மிருசுவில், வரணி, கச்சாய், மந்துவில் ஆகிய உப அஞ்சல் நிலையங்களில் இக் கொடுப்பனவுகளைப் பெறுவோர் உடனடியாகத் தத்தமது அஞ்சல் அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளுமாறு அஞ்சல் அதிபர்கள் அறிவித்துள்ளனர். (ஐ-117)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

சேவையில் உயர்ந்த உத்தமரைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமிதம் அடைகின்றோம்.



உயர்திரு.வே.பொ.பாலசிங்கம் அவர்கள்

முதன்முதல் எமது சபையின் ஆணையாளராகத் தங்களது உள்ளூராட்சிச் சேவையை 01.01.1979 இல் ஆரம்பித்து, தற்போது வடக்கு - கிழக்கு உள்ளூராட்சி ஆணையாளராகப் பதவி ஏற்றமையையிட்டு நாமும் எமது சபையினரும் பெருமகிழ்ச்சி அடைவதுடன், தங்களது சேவை மேன் மேலும் சிறப்புற எல்லாம் வல்ல இறையருளை வேண்டுகின்றோம்.

தலைவர், செயலாளர்,
உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

(C/15172)



## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பிரதேசத்துக்கு புதிய நூல் நிலையக் கட்டடம் கட்டுவதற்கு 3,50 000 ரூபா நிதியினையும் கலை ஒளி விளையாட்டுக் கழக புதிய வீதியினைச் செப்பனிடுவதற்கு 10,00 000 ரூபா நிதியினையும் வைரவர் கோயில் புதிய வீதியினை செப்பனிடுவதற்கும் 10,00 000 ரூபா நிதியினையும் எமது ஆலயமான சிவன் (சந்திரமௌளீஸ்வரர்) ஆலயத்திற்கு 2,00 000 ரூபா நிதியினையும் ஒதுக்கீடு செய்து வழங்கியமைக்கு



வடக்கு புனர்வாழ்வு - புனரமைப்பு
வடக்கு-கிழக்கு தமிழ் விவகார,
இந்து சமய கலாசார அமைச்சரான
கே.என். டக்ளஸ் தேவானந்தா
அவர்களுக்கும்



யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்
கே.வி.குகேந்திரன் (ஜெகன்)
அவர்களுக்கும்



ஈ.பி.டி.பி. யாழ்.மாவட்ட பிரதி அமைப்பாளர்
க.மணிபல்லவராஜன் (நிஷாந்தன்)
அவர்களுக்கும்



ஈ.பி.டி.பி. வலி.வடக்கு அமைப்பாளர்
தி.சிவகுமார் (வேலு)
அவர்களுக்கும்

எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு மேலும் அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கலைச்செல்வி சனசமூக நிலையம்,
கலைச்செல்வி மகளிர் அமைப்பு,
கலை ஒளி விளையாட்டுக் கழகம்,
சித்தியம் புளியடி,
தெல்லிப்பழை.

பரிபாலன சபை,
சிவன் ஆலயம் (சந்திரமௌளீஸ்வரர்),
கோயிற்புலம்,
தெல்லிப்பழை.

(83804)



## கண்ணீர் பூக்கள்

03.02.2001இல் அகால மரணமடைந்த

தயானந்தன் வாகீசன் அவர்களின்

பிரிவுத் துயர் கேட்டு வேதனை அடைவதுடன் அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மீனாட்சி அம்மா
குடும்பத்தினர்.

வயாவிளான். (83822)



## திருமண வாழ்த்து

புதுமணத் தம்பதிகள்

திரு.கா.வே.குகேந்திரன் (ஜெகன் பா.உ), தஷாணி

ஆதியோரைச் சீரும் சிறப்புடனும் நீடூழி வாழ மனதார வாழ்த்துகின்றோம்.

க.திருச்செல்வம்,
க.யோகரட்ணம்,
ஈ.ஆர்.திருச்செல்வம்.

யாழ்ப்பாணம். (83795)

## கொழும்பில் நேற்று மாலை திடீர் சோதனை

கொழும்பு,பெப்.6

கொழும்பு கொட்டாஞ்சேனைப் பகுதியில் நேற்று மாலை திடீர்ச் சோதனை நடத்திய படையினர் சுமார் 400 தமிழ் இளைஞர் யுவதிகளை விசாரணைக்கு உட்படுத்தினர்.

பிரதான வீதிகளில் சென்றவர்கள் மற்றும் வீடுகளில் தங்கியிருந்தவர்கள் எனப் பலரும் பொலீஸாராலும், இராணுவத்தினராலும் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

நேற்று மாலை 4.30 மணிக்கு ஆரம்பமான இந்தத் தேடுதல் 6.30 மணி வரை தொடர்ந்து இடம்பெற்றது.(ஐ-7)

## நோர்வேயின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முயன்று வருகின்றீர்கள்.

சர்வதேச சமூகத்தின் சமாதான விருப்பினையும், மனித உரிமைகள் பேணப்படவேண்டும் என்பதிலுள்ள பற்றினையுமே தங்களது இடைவிடாத முயற்சிகள் சுட்டிநிற்கின்றன.

சுதந்திரமான கௌரவம் மிக்க வாழ்வையே அபிலாஷையாகக் கொண்டுள்ள நாங்கள் சமாதானப் பேச்சுக்கான ஏற்பாட்டாளராகச் செயற்பட முன்வந்துள்ள தங்களதும் நோர்வே அரசினதும் முயற்சிகள் மூலம் எமது அபிலாஷைகள் நிறைவேற வேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

இவ்வாறு அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-3-7-164)

## இந்தியக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பா.ம.கவின் இந்த முடிவு தமிழக தேர்தலை ஒட்டிய ஓர் அரசியல் தந்திர நடவடிக்கை என்றும் கூறப்படுகிறது. ஒரு திடீர் திருப்பமாக இது வரை தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றிருந்த பா.ம.க. இந்தத் தேர்தலில் அ.தி.மு.கவுடன் கூட்டுச் சேர உள்ளதாகவும் -

இது தொடர்பான உத்தியோக பூர்வ அறிவிப்பினை கட்சித் தலைவர் ராமதாஸ் இன்று சென்னையில் வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் - தெரிவிக்கப்படுகிறது. (ஐ-7)

## களியாட்டங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் பொருந்தும்.

மேற்குறிப்பிட்ட தேவைகளுக்கு ஜெனரேட்டர்கள் மூலமே மின்னைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

மின்சாரப் பாவனையைக் கட்டுப்படுத்தும் 2001ஆம் ஆண்டின் முதலாம் இலக்க அவசரகாலப் பிரமாணத்தை பொதுசனப் பாதுகாப்பு அதிகாரச் சட்டம் பிரிவு 5இன் கீழ் ஜனாதிபதி வர்த்தமானி மூலம் வெளியிட்டுள்ளார். (ஐ-7)

## பாதயாத்திரை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று அதிகாலை மாவனல்லையிலிருந்து ஆரம்பமான யாத்திரையில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டார். ஆயிரக்கணக்கான ஐ.தே.கட்சியின் தேசிய இளைஞர் முன்னணியைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளும் கலந்து கொண்டனர். பாதைகளின் இரு மருங்கிலும் மக்கள் கூடியிருந்து பார்வையிட்டதோடு தலைவர்களை மலர்மாலை அணிவித்தும் பட்டாசு கொளுத்தியும் வரவேற்றனர். நேற்று கலிகமுவ நகரில் முடிவடைந்த யாத்திரை மீண்டும் இன்று அங்கிருந்து தொடரும். (ஐ-3)

## அம்பாறையில் நேற்றுக் ஹர்த்தால்

விடுதலைப்புலிகளின் ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தத்திற்குப் பதிலாக அரசாங்கமும் யுத்த நிறுத்தம் மேற்கொண்டு பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்று கோரியும் -

தமிழ் மக்களின் அபிலாஷை சுய நிர்ணய உரிமையே என்பதை வலியுறுத்தியும் -

அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று ஆலையடி வேம்புப் பிரதேசத்தில் நேற்றுக் ஹர்த்தால் இடம்பெற்றது. அந்தப் பிரதேசத்திலுள்ள பத்துத் தமிழ்ப்பாடசாலை மாணவர்களும் வகுப்புக்களைப் பகிஷ்கரித்தனர். தமிழர்களின் கடைகள் மூடப்பட்டிருந்தன.

(ஐ-3)


**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்தும்**

**முழுநிலா நாள் கருத்தரங்கு**

இடம் : யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபம்

காலம்: நாளை (07.02.2001) புதன்கிழமை

நேரம் : பிற்பகல் 3.30 மணி (புதிய நேரம்)

தலைமை : திரு.க.சி.குகதாசன்

(முன்னாள் அதிபர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)

தலைப்பு : "செலாவணி நெருக்கடியும் நிகழ்காலப்பிரச்சினையும்"

இணைப்பாளர்: திரு.எம்.சின்னத்தம்பி

(சிரேஷ்ட விரிவுரையாளர், கல்வியியற்றுறை, யாழ்.பல்கலைக்கழகம்)

கருத்துரை வழங்குவோர்:

✻ திரு.க. சிவநாதன்

(தலைவர், பொருளியற்றுறை, யாழ்.பல்கலைக்கழகம்)

✻ திரு.வே.கருணாகரன்

(பொருளியல் ஆசிரியர், யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.)

அனைவரும் வருக!

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, பழைய மாணவர் சங்கம்.

ஆதரவு:- IBMS

No: 701, K.K.S. Road, Jaffna.

Tele:021-3165 (C/15176)





**புதுக் கடைத் திறப்பு விழா அழைப்பு**

நிகழும் விக்கிரம வருடம் தை மாதம் 25ஆம் திகதி (07.2.2001) புதன்கிழமை பகல் 9.36 மணிமுதல் 10.30 மணி வரையுள்ள சுப முகூர்த்த வேளையில்

**ஐங்கரன் வீடியோ விஷன்**

திறப்பு விழா வைபவம் செய்ய நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.39 ப.நோ.கூ.ஒழுங்கை

39, ஆடியபாதம் வீதி,

திருநெல்வேலி வடக்கு ,

திருநெல்வேலி.

இங்ஙனம்

கனகசிங்கம் முரளி

(கண்ணன்)

உரிமையாளர்




**ஐங்கரன் வீடியோ விஷன்**

(C/15174)



**A/L 2003**

**ACCOUNTING**




பிரிவு 1

WED,FRI 4.15-5.15

பிரிவு 2

SAT,SUN12-1

**BEACON**

வெலிங்டன் சந்தியருகில்

(83809)



**K.J.COMMUNICATION**

**AND VIDEO CENTRE**

DUTEH ROAD JUNCTION

SITHANKERNEY

✪ புதிய தமிழ் திரைப்படங்கள்

✪ புதிய ஆங்கில CD க்கள்

✪ புதிய ஆங்கில திரைப்படங்கள்

மலிவான விலையிலும், வாடகையிலும்பெறலாம்.

✻ COMPUTER TYPING

✻ FAX - 070 - 212474

✻ E - MAIL

✻ தமிழ்,ஆங்கில தட்டச்சு தரமான மலிவான போட்டோபிரதி

(83715)



**நிரு நியூசன் சென்ரர்**

கோண்டாவில்

**A/L 2001**

**கம்பனி**

**S. தவா**

ஆரம்பம்: 7-2-2001(புதன்)

தனிப்பாட அனுமதி வழங்கப்படும்

(83819)



**சீமெந்து விற்பனை**

புதிய அட்லஸ்(ATLAS), மிற்சுயி(MITSUI) சீமெந்துகள் விற்பனைக்கு வந்துள்ளன.

அட்லஸ்(ATLAS) பைக்கற் ஒன்றின் விலை - 540/=

மிற்சுயி(MITSUI) பைக்கற் ஒன்றின் விலை - 560/=

டோக்கியோ சீமெந்துக் கம்பனியின் மிற்சுயி(MITSUI), அட்லஸ்(ATLAS) சீமெந்துகள் சர்வதேச அங்கீகாரம் பெற்றதுடன் (ISO 14001) இலங்கை தர நிர்ணய சபையினால் அங்கீகரிக்கப்பட்டு (SLS) முத்திரை பொறிக்கப்பட்டுள்ளது.

**ஜெசிபா ஏஜென்சி**

132, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C/15166)

T.P 2407 FAX: 2140



**யாழ். மத்திய கல்லூரி**

**முறைசாராக் கல்விப் பிரிவு**

பத்திரிகையாளர்களுக்கான பயிற்சி நெறி 07.02.2001 ஆரம்பிக்கப்படவுள்ளது. தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியல் விளம்பரப் பலகையில் பார்வைக்கு உள்ளது.

✻ முன்பள்ளி ஆசிரியர்களின் பரிசளிப்பு விழாவின் போது எடுக்கப்பட்டுள்ள புகைப்படங்கள் வந்துள்ளன.

(C/15181) -அதிபர்



**கருத்தரங்கு**

பொருள் : குடும்பக் கட்டமைப்பு சிதைவுறுகிறதா?

கருத்துரை வழங்குபவர் : கவிஞர் சோ.பத்மநாதன்

(முன்னாள் அதிபர், பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை)

காலம் : நாளை (07.02.2001) புதன்கிழமை

நேரம் : 3.30 (இல.நேரம்)

இடம் : அகவொளி குடும்ப வளத் துணை நிலையம், 131, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்.

இதில் கலந்து பயன்பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(83785) -இயக்குநர்.


## மரண அறிவித்தல்கள்

### நாகர் கதிரவேலு (விசுவப்பா)

கீரிமலையைப் பிறப்பிடமாகவும், நவாலியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகர் கதிரவேலு 04.02.2001 ஞாயிற்றுக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் நாகம்மாவின் அன்புக் கணவரும் ரட்ணம் (பொறியியலாளர்-கொழும்பு), திருமதி ஆறுமுகம் (கனடா), நாகேஸ்வரன் ((ஜேர்மனி), இலங்கைநாயகம் (சிவன்- ஜேர்மனி), கமலேஸ்வரன் (ஜேர்மனி), ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆறுமுகம் ஸ்ரீதிருக்குமார் (ஜேர்மனி), தர்மராசா (நவாலி), மதிகரன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மா.தருமராசா (மருமகன்)

*C.P.M. லேன்,*
*நவாலி தெற்கு,*
*மானிப்பாய்.*

(C/15183)

### த.ஆ.சங்கரப்பிள்ளை

(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர், தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம்)

பத்தாவத்தை இளவாலையைச் சேர்ந்த த.ஆ.சங்கரப்பிள்ளை நேற்று (05-02-2001) அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக்கணவரும் சந்திரானம், மதியுரை, (பொறியியலாளர், உலக வங்கி), விமலகாந்தன் (பேபியர்), நகநந்தினி,(ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியை),ஆகியோரின் அன்புத் தந்தையும், இந்திராணியின் (பொறியியலாளர்) அன்பு மாமனாரும கௌரியின் ஆசைப் பாட்டனாரும் காசிநாதரின் (ஓய்வு பெற்ற ஆசிரியர், கொல்லங்கலட்டி) அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06-02-2001) செவ்வாய்க்கிழமை பி.ப 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்..

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ச.நகநந்தினி (மகள்)
(ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியை, இளவாலை சென். ஹென்றீஸ் கல்லூரி)

*பத்தாவத்தை,*
*இளவாலை.*

(C/15182)

இப்பத்திரிகை நியு, உதயன் பப்ளிகேசன் (ப்றைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06. 02. 2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.